
www.tamilarangam.net

RAYA
87 RUE DE COLOMBES
92600 ASNIERES SUR - SEINE ; FRANCE

சித்திரை, 1992

# வான்மதி







தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

# வான்மதியை வாழ்த்துபவர்கள்

காலத்தை எவ்வாறு போக்கலாம் என்று தெரியாமல் திணறும் இவ் இளம் பருவத்தில் பணத்தை விரயமாக்கவும், பணத்தைத் தேடவும் விளையும் இவ் இளம் சமுதாயத்தில் ஆக்கபூர்வமான மனப்பான்மையுடன் செயற்பட முன்வந்த உங்களை வாழ்த்துவதில் மகிழ்ச்சி யடைகின்றேன். தமிழ், கலை, கலாச்சார ஆக்கங்களை எழுத்து வடிவில் தந்து உங்கள் பதிப்புகளை உலகம் வாழ் தமிழ் மக்கள் வாசித்துப் பயன்பெற தாங்கள் எடுத்த முயற் சிக்கு என் நன்றியுடன் கூடிய ஆசியைத் தெரிவிக்கின்றேன்.

"வான்மதி தமிழ் வானில் நிலைத்து வளம் பெற என் வாழ்த்துக்கள்"

- அன்புடன்
இரட்ணகாந்தன்
காப்பாளர்
வான்மதி கலையகம்

■

வான்மதி!

இருளை அகற்றி தன்னொளி பரப்புகின்ற வெண்ணிலவு, பாரிஸ் நகரில் பவனி வரப்போ கின்ற வான்மதி. மூடிக்கிடக்கின்ற மன வானங் களை நிர்மலமாகக் காட்டும். தன்னொளியால் எம்மவரின் அறிவையும் இதயத்தையும் செழு மைப்படுத்தட்டும். இதன் ஒளிக்கதிர்கள் மக் களைத் தொட வேண்டும். தொட்டுத் துளைக்க வேண்டும். கலை இலக்கியம் ஐரோப்பிய நாடுகளில் புதிய பரிணாமம் பெறு கிறது. படிக்கவிரும்புவோர் கூடிக்கொண்டு வருவது மகிழ்ச்சிக்குரியது. சமகால சமூகப் பிரக்ஞையுடன் கூடிய படைப்புக்கள் இன்னும் வர வேண்டும்.

வான்மதி - சமூக முன்னேற்றத்தை முன்னெ டுத்துச் செல்ல விரும்புகின்ற பல இள நெஞ் சங்களின் கூட்டு முயற்சிஎன்று அறிவதில் பெரு மகிழ்ச்சி. இதில் பல ஆக்கங்கள் சிறு வர் சிறுமிகளுக்கான ஆக்கங்கள்.

வானத்து நிலவைக்காட்டி அறிவையும் அழ கையும் ஊட்டுகின்ற அன்னை போல் வான்மதி அந்நிய நாட்டிலே ஒரு புதிய எதிர்காலத்தை எதிர்நோக்குகின்ற எம் சிறார்களுக்கு ஓர் அறிவுத் தாயாய் தன் பணியைத் தொடர என் இதய பூர்வமான வாழ்த்துக்கள்.

எம். அரியநாயகம்
தலைவர்
ஐரோப்பிய தமிழ் எழுத்தாளர் சங்கம்.

■

வான்மதி கலையகத்தின் பணி தொடரவே ண்டும். தமிழ் உலகில் வெற்றிக்கொடி நாட்ட வேண்டும்.

வாழ்த்தும்
இளையநிலா இசைக்குழு

■

பாரிஸ் மாநகரில் உள்ள தமிழ் மக்கள், தமிழ்மொழியின் மேன்மையினை அறியவேண் டும். வளர்ந்துவரும் எம் சந்ததியினர் தமிழ் மொழியின் சிறப்பினை உணரவேண்டும் என்ற எண்ணத்தில் தமிழ் மக்கள் மத்தியில் உலாவ ரவிருக்கும் "வான்மதி" கலை இலக்கிய ஏடு எனும் ஓடம் பவனிவர வேண்டும் எனவும் அதன் துடுப்பாக இருக்கும் கல்விநிலைய தமிழ் ஆசிரியர்களின் சேவை தொடர்ந்தும் இருக்க வேண்டும் என்றும் வாழ்த்துகிறோம்.

பாரிஸ் தமிழர் கல்வி நிலையம்

www.tamilarangam.net

# வான்மதி பிறந்த கதை

மானிப்பாய் இந்துக் கல்லூரியில் வகுப்பு 7 A யில் 1984 ம் ஆண்டு மாதம் திகதி தெரிய வில்லை மறந்து விட்டேன். சமூகவியல் பாட நேரம் ஆசிரியை செல்வி செல்லையா கையில் ஒரு புதிய புத்தகத்துடன் வகுப்பறையினுள் நுழைந்தார். யாழ் இந்துக் கல்லூரி மாணவர்க ளால் எழுதப்பட்ட "கலைமதி" என்ற கையெழுத் துப் பிரதிதான் அது. அந்நூல் பற்றி ஆசிரியர் எமக்கு அறிமுகம் செய்துவிட்டு பாடத்தைத் தொடர்ந்தார். மறுபாடம் தமிழ் ஆசிரியர் முடி யப்பு. வரலில்லை. மாணவர்களில் பண்டிதர், கிளிப்பிள்ளை, பொன்னாச்சி, தடிமாடன் ஆகி யோர் ஒன்று கூடினோம். கொஞ்சம் பொறுங்கள் இவர்களைப் பற்றி ஒருசிறு அறிமுகம்.

1. பண்டிதர்:- இது நான்தான். அன்றுமுதல் இன்றுவரை எனக்குத்தான் எல்லாம் தெரியும் என நான் நினைத்து வந்ததால் எனக்குக் கிடைத்த பட்டம்.
2. கிளிப்பிள்ளை:- முழுப்பெயர் பரதன், பெண் மையின் மறுவடிவம். பேச்சு, செயல் எல்லாம் அப்படியே. இனிய குரல். கையில் பென்சிலை எடுத்துவிட்டால் ரவிவர்மா இவனிடம் பிச்சை வாங்க வேண்டும்.
3. பொன்னாச்சி:- இவரது பெயரை மறந்துவிட் டேன். அறுபது வயதுக் கிழவியின் தோற்றம். தோற்றத்திற்கும் அறிவுக்கும் சம்பந்தமேயில்லை.
4. தடிமாடன்:- பெய் தவஜோதி. ஒரே நேரத்தில் 5 ஐஸ் கிறீம் சாப்பிடுவான்.

வேறுபலர் முக்கியமானவர்களல்லர். எமக்குள் கலைமதி போன்ற ஒரு புத்தம் வெளியிட்டால் என்ன என்கின்ற ஆலோசனை. கையெழுத்துப் பிரதிதான். ஜெகநாதன் என்பவன் 20 பக்க ஒற் றைக் கொப்பி வாங்கித்தர முன்வந்தான். மட்டை வெட்டிக் கட்டப்பட்டு அழகான பிள்ளையார் படமொன்றை பரதன் வரைந்தான். முன்னுரை அழகிய கையெழுத்தைக் கொண்ட ஜெயக்குமா ரால் எழுதப்பட்டது. பலர் தமது கற்பனைகளைக் கொட்ட முன்வந்தனர். ஆனால் பெயர் முடிவாக வில்லை. அனைத்தையும் அறிந்த என்னிடம் அந்தப் பொறுப்பு தரப்பட்டது. யாழ் இந்துக் கல் லூரி மாணவர்களின் புத்தகம் கலைமதி. ஆகவே எங்கள் புத்தகம் வான்மதி, நான் பெயர் வைத் தால் அதற்கு மறுப்புச் சொல்ல யாருமேயில்லை. வான்மதி வளர்ந்து ஒரு சிறிய நூலாகியது. கலைமதியை அறிமுகஞ் செய்த ஆசிரியை செல் லையாவிடம் அதனைக் கொடுத்த போது அவர் எங்களைக் கட்டிப்பிடித்து முத்தமிடாததுதான் குறை.

வான்மதியின் முதலாவது இதழை உருவாக்க உற்சாகமாக உழைத்தவர்கள் இரண்டாவதற்கு அதே அளவில் உற்சாகத்தைத் தரவில்லை. ஆனாலும் நான் அதை கைவிடுவதாக இல்லை. எனது ஊரைச் சேர்ந்தவரும் மல்லாகம் மகாவித் தியாலயத்தில் படித்துக்கொண்டிருந்த உறவின ரான தணிகாசலத்திடம் இதுபற்றி நான் கதைத்த பொழுது அவருக்கும் அதில் ஒரு ஆர்வம் உண் டாகியது. மானிப்பாய் இந்துக் கல்லூரி + மல் லாகம் மகாவித்தியாலயம் கூட்டு முயற்சியில் வான்மதி 13 வரை உருவாகியது. அதன்பிறகு பல பிரச்சனைகள். படிப்புச் சுமை, பணப்பிரச் சனை, வரவேற்பின்மை, வயதுக் கோளாறுகள் வான்மதியை நாம் அனைவருமே மறந்துவிட் டோம். இடையில் சிறிது காலம் எமக்கு நாடகங் கள் நடிக்க வேண்டும் என்ற ஆர்வம் உருவாகி யது. எனவே வான்மதி நாடக மன்றம் உருவாக் கப்பட்டு வீரவேங்கை, விதியின் வழியினில், சாதிக்கு ஒருநீதி, சூறாவளி போன்ற நாடகங்கள் எம்மால் வான்மதி நாடக மன்ற வெளியிடாக மலர்ந்தன. வீரவேங்கையும், விதியின் வழியினி லேயும் பல அன்பு ரசிகர்களை எமக்குத் தந்தது. குரு இல்லாத சீடர்களாக இச்சிறு பிள்ளைகளின் கிறுக்குத் தனங்களெல்லாம் மேடையேறின. காலச்சக்கரத்தின் சுழற்சியில்.

14. 02. 1992 இடம்: Garges les Gonesse. நண் பன் பாலன் என்னைச் சந்தித்து புத்தகம் ஒன்றை வெளியிட வேண்டும் என்றான். அத்திவாரம் இடப்பட்டது. பெயர் சூட்டும் பொறுப்பு மீண்டும் என்னிடம். எனவே மீண்டும் வான்மதி. நான் நேசிக்கும் வான்மதி.

சிறுபிள்ளைகளுக்கு உணவு கொடுக்கும் பெற் றோர்பேயையும், பூச்சாண்டியையும் காட்டி கோழையர் உலகினை உருவாக்குவது இயல்பு. ஆனால் நிலாவைப் பிடித்துத் தரவே முயல்கின் றனர். அந்த நிலாவை எட்டிப் பிடிக்கும் முயற்சி யில் மனிதன் வெற்றிபெற்றுவிட்டான். எமது சிந்தனைகளும் எம் பிஞ்சுக் கரங்களில் வலிய ஆயுதத்தினை தாங்கி வெற்றி என்கின்ற இலக்கை நோக்கி இளைய பறவைகளின் புதிய சிந்தனைகளில் முதிர்ந்த பறவைகள் மனமகிழ்ந்து வாழ்த்த எங்கள் அன்புக் காணிக்கை.

வானமே எல்லை.

அன்புடன்
- ரமேஷ் -

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



# முதற்பறப்பு

அந்தச்சிறிய குஞ்சால் ஏனோ தன் அண்ணாக்களின் மகிழ்ச்சியில் பங்கெடுக்க முடியவில்லை. தாயும் தந்தையும் அதனை ஏளனமாகப் பார்த்தன.

அந்தச் சிறிய குஞ்சால் ஏனோ தன் அண்ணாக்களின் மகிழ்ச்சியில் பங்கெடுக்க முடியவில்லை. தாயும் தந்தையும் அதனை ஏளனமாகப் பார்த்தன. இறகுகளின் பலத்தில் அக்குஞ்சிற்கு நம்பிக்கையில்லை என்பதே அது தன் முதற் பறப்பை ஆரம்பிக்காததற்கு காரணம். அண்ணன்களும் தாய் தந்தையும் பலமுறை வருந்தி அழைத்தும் போக மறுத்துவிட்டது.

முதல்நாள் கூட்டில் பெரிய விருந்தையே ஏற்பாடு செய்துவிட்டது தாய்ப்பறவை. முதற்பறப்பை நிறைவேற்றிவிட்ட தன் அண்ணன்களின் வீரப்பிரதாபங்களை தன் உறவினர்களிடம் சொல்லிச் சொல்லி தாய்ப்பறவை மகிழும் போதெல்லாம் குஞ்சிற்கு அதன் அடிமனதில் பெரும் வேதனையே எழும்.

இரண்டாம் நாளும் பெற்றோரும் அண்ணன்களும் காலையே வெளியே சென்றுவிட்டனர். குஞ்சிற்கு உணவு தேடித்தர யாருமே முன் வரவில்லை. அன்று பகல் முழுவதும் பட்டினிதான். மாலையில் தாய்ப்பறவை சிறிய மீன் ஒன்றை உணவாகத் தந்துவிட்டு திரும்பிப் பாராமலேயே சென்று விட்டது.

முட்டையில் இருந்து குஞ்சு வெளியே வந்தபோது உலகமே தனக்குள் அடங்கி விட்டதாக மகிழ்ந்து ஆர்ப்பரித்த தாய்ப்பறவை இன்று இப்படிச் செய்தது குஞ்சின் மனதை என்னவோபோல் ஆக்கி விட்டது.

மூன்றாம் நாள் அண்ணன் பறவை தனக்குப் புதிதாகக் கிடைத்த நண்பர்களுடன் ஒரு மீனைப் பிடித்துவந்து குஞ்சிற்கு தருவது போல் முன்வந்துவிட்டு தராமல் ஏமாற்றியது. இப்படிப் பல முறை தன் அண்ணன் பறவை செய்யும் போதெல்லாம் அதன் நண்பர்கள் ஏளனமாகச் சிரித்தன.

குஞ்சு அண்ணாந்து வானத்தைப் பார்த்தது. அதன் உள்ளத்தில் புதிய நம்பிக்கை ஒன்று சுடர் விட்டது. தன் பட்டுப் போன்ற மெல்லிய சிறகுகளை விரித்தது. காற்றைக் கிழித்துக் கொண்டு வானில் உயரே எழுந்தது. இப்போது அதற்குப் பயமில்லை.

அது உலகையே வென்றுவிட்டதாக எண்ணிக் கொண்டது. பெற்றோரும் அண்ணன்களும் மகிழ்ச்சியுடன் தமது இறகுகளை அசைத்து அதனை வரவேற்றன. தம் அலகுகளால் உணவு ஊட்ட முன்வந்த போது பெற்றுக் கொள்ள குஞ்சு மறுத்து தன்னம்பிக்கையுடன் தனக்குத் தேவையான மீனைப் பிடிக்க நீர்ப்பரப்பில் இறங்கியது. ■

# பூந்தளிர்கள்

## தொகுப்பு: மதிமாமா

அன்புச் செல்வங்களே

உங்கள் பிஞ்சுக் கரங்களினால் உருவாக்கப்பட்ட ஆக்கங்களை வான்மதியின் "பூந்தளிர்கள்" பகுதிக்கு அனுப்பிவையுங்கள். தமிழ், பிரெஞ்சு, ஆங்கிலம், ஜேர்மனி, இத்தாலி ஆகிய மொழிகளில் உங்கள் எண்ணங்களை எழுதுங்கள். அத்துடன் உங்கள் கறுப்பு வெள்ளை புகைப்படங்களையும் தெளிவான முகவரிகளையும் அனுப்பி "பூந்தளிர்கள்" அங்கத்தவராக சேர்ந்து கொள்ளுங்கள். மருமக்களின் அறிவுபூர்வமான வினாக்களுக்கு பதிலளிப்பதுடன் சிறந்த ஆக்கங்களுக்கு பெறுமதியான பரிசில்களை வழங்க மதி மாமா மகிழ்ச்சியுடன் காத்திருக்கின்றார்.

இவ்விதழில் தங்கள் ஆக்கங்களை எழுதியிருக்கும் சுபோதினி, சங்கீதா, பிரதீபன், தட்சாயணி ஆகியோருக்கு மாமாவின் வாழ்த்துக்கள்

**பூந்தளிர்கள் - முகவரி**

S. Balamurugan
c/o. Nallathampy
APPT 32, 12, Rue Honore de Balazac
95140 Garges Les Gonesse, France.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

# வான்மதி கலையகத்தின் தலைவரிடமிருந்து.....




நீண்டகால எமது முயற்சி தற்சமயம் எங்களுக்கு ஒரு ஆரம்பத்தைத் தந்துள்ளது. எமது சமுதாயத்தையும் வளர்ந்துகொண்டிருக்கும் எமது அடுத்த சமுதாயத்தையும் அவர்களால் வளர்க்கப்படவிருக்கும் மற்றைய சமுதாயங்களையும் ஓர் நல்ல பாதயமைத்து நல்லவழியே நடந்து செல்ல வைப்பதற்காகவும் பூத்தும், காய்த்தும், பழுத்தும் கூட அச்சம், ஊக்குவிப்பின்மை என்ற பல்வேறு இலைகளின் பின் மறைந்திருக்கும் எமது சமுதாய இளைஞர்களின் மறைப்புக்களை நீக்கவும் வருங்காலத்திற்கு நாம் ஞாபகக் குறிப்புகளாக இருக்க வேண்டும் என்பதற்காகவும் நாம் எமது ஆர்வங்களையும் அபிலாசைகளையும் சிறிய அளவில் தொடங்கியுள்ளோம்.

ஒரு துளி பாதரசம் நிலத்தில் வீழ்ந்து பல பிரிவுகளாகச் சிந்தி ஓடுவது போல் எம்மினம் இன்று சிந்திச் சிதறி வெவ்வேறு திசைகளில் இருக்கின்றனர். இருப்பினும் "வான்மதி" வானத்திலுள்ள மதி.

நீல வானத்தில் நீந்துகின்ற நிலவின் உயரத்திற்கு உயர்வோம் எனும் நம்பிக்கை எமக்கிருக்கிறது. அதற்கான உங்கள் எல்லோருடைய ஒருமித்த பங்களிப்பு, நல்லாசி ஆதரவு எமக்கு கிடைக்கும் என்ற நம்பிக்கையுடன் இந்த இளைய மலர்கள் இணைந்து ஓர் மாலையாகி அதனை எம் உயிரினுமினிய தமிழ்த்தாய்க்கு சமர்ப்பிக்கிறோம்.

- செல்வி கலைவாணி அம்பலவாணர் -



# தீபம்

- பாலன் -

சின்னஞ்சிறு குடிசையிலே
விடிவிற்கு ஏங்கிய இரவினிலே
சிட்டுக் குருவிகள் இரண்டு
புத்தகம் தனை எடுத்து
பயிலும் காட்சிதனை
காண்பதற்கு கதிரவனும் மறந்ததேனோ!
ஏழை எனும் இரக்கம்
இறைவனுக்கும் இல்லையெனில்
இருப்பதன் அர்த்தம் என்ன அவன்!
மலர் தூவி மாலை தனைப் போர்த்தி
மணியடித்து மந்திரம் சொல்லி
மறுபடியும் ஆராதனை செய்வதா?
செய்வதன் அர்த்தம் என்ன?
ஏழையின் ஈனக்குரல்
இறைவனின் கொசுத் தொல்லை எனில்
போராடும் ஏழையின் உயிர்
தொல்லையாம் இறைவனுக்கு
என்னுயிர் போகுதடி பொன்னம்மா!
இறைவனடி சேர்வதற்கு செல்லம்மா!
இரு கையும் கூப்பியபடி குப்பம்மா!
கிடைத்ததென்ன சொர்க்கமா சொல்லம்மா?
திரியின் சுடர் தரையில் வீழ்கிறது
தீயின் சுவாலை இருளையும் பகலாக்குகின்றது.
திரியின் முடிவிலே தீபத்தின் ஒளி
சென்ற இடம் எங்கோ?
மிஞ்சியவை சுடர்கள் சுடலையிலே
முடியும் வரைக்கும் வெளிச்சம்
முடிந்து விட்டால் முடிவு எங்கோ?
வாழும் வரைக்கும் இறைவன் எனும் பயம்
முடிந்து விட்டால் இருந்த இடம் எங்கோ
மனிதன் என்பது தீபத்தின் திரி
வாழ்க்கை என்பது தீபத்தின் ஒளி
திரி முடிந்தால்! தீபத்தின் ஒளி எங்கோ......



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

நிலா நிலா ஓடிவா
நில்லாமல் ஓடிவா.
செந்தமிழ் கவிகள் சேர்ந்து நாம் புனைவோம்.
சிங்காரக் கதை சொல்லி அன்ன நடை பயில்வோம்.
நாளை இந்த உலகம் எங்கள் கையில் என்று
தலைநிமிர்ந்து சொல்லவே துணையாக நியும் வா.
வட்ட வட்ட நிலாவே எம் இனிய வான்மதியே
எண்ணங்களின் கருவே ஏற்றம் புரிய வா.

- வான்மதி கலையகம் -

## வான்மதி கலையகம்

| | |
|---|---|
| தலைவர்:- | செல்வி. கலைவாணி அம்பலவாணர் |
| உபதலைவர்:- | செல்வன். குணசிங்கம் சிவரூபன் |
| செயலாளர்:- | செல்வன். சிவசுப்ரமணியம் பாலமுருகன் |
| இணைச்செயலாளர்:- | செல்வன். தம்பிராஜா பிரபாகரன் |
| பொருளாளர்:- | திரு. மத்தியூஸ் டக்ளஸ் |
| அங்கத்தவர்கள்:- | செல்வி. துஷ்யந்தி மகேந்திரராஜா |
| | செல்வன். குணசிங்கம் குணரூபன் |
| | செல்வன். ஜெ. அன்ரன் தயானந்தராஜா |
| | செல்வன். நவரட்ணராஜா கெங்கராஜ் |
| | செல்வன். மகாலிங்கம் சுரேந்திரன் |
| | திரு. கந்தையா சண்முகநாதன் |
| காப்பாளர்:- | (1) திரு. இரட்ணகாந்தன் |
| | (2) திரு. சண்முகதாசன் |

**வான்மதி மாத வெளியீடு ஆசிரியர் குழு**

1. கலைவாணி அம்பலவாணர்
2. குணசிங்கம் சிவரூபன்
3. சிவசுப்ரமணியம் பாலமுருகன்
4. துஷ்யந்தி மகேந்திரராஜா
5. அ. இரட்ணகாந்தன்

**தொகுப்பாசிரியர்கள்:-** கு. சிவரூபன் (ரமேஷ்)
சி. பாலமுருகன் (பாலன்)

**ஓவியர்:-** த. பிரபாகரன் (பிரபா)

**புகைப்படங்கள்:-** ரங்கேஸ்வரன்

வான்மதியின் தொடர் இதழ்களில் தங்கள் கதை, கவிதை, கட்டுரைகள், நகைச்சுவைத் துணுக்குகள், உலக விளையாட்டுச் செய்திகள், அறிவுபூர்வமான ஆக்கங்கள், அரசியல் ஆக்கங்கள் அனைத்து விடயங்களையும் எதிர்பார்க்கின்றோம். உங்கள் வினாக்களுக்கு விடையளிக்க வான்மதி காத்திருக்கின்றது. விமர்சனங்களையும் எதிர்பார்க்கின்றோம்.

**அனுப்ப வேண்டிய முகவரி:-**

VANMATHY
SIVARUBAN
13, Rue des Peupliers,
95140 Garges les Gonesse,
தொலைபேசி:- 39 86 73 55

# பாரதி

**ஒரு சமூகவியல் பார்வை.**

மதம் என்ற இரும்புக்குண்டு குண்டு காலில் கிடந்து இழுத்தாலும் செயல்வீரர் என்ற இயல்பின் காரணமாக எவ்வளவோ முன்னேறி இருக்கிறார். காலில் கிடந்த அந்தக் குண்டை அறுத்து எறிவதற்குப் பதில் அதையே கையிலெடுத்துக்கொண்டு எதிரியை விரட்டலாம் என்று நினைத்தார். பார்ப்பனக்கவி என்று புழுதி வாரி இறைப்போரும், வைதீகக்கவி என்று கட்டிப்புரள்ப வரும் தங்கள் தங்கள் இயக்கங்களின் நோக்கங்களுக்காக பாரதியாரை அணுகி தோல்வியைத் தழுவுகிறார்கள். நம் தமிழ் மொழியில் ஈஸ்வர சம்பந்தமான பாடல்களும், காவியங்களும், புராணங்களும், பிறவும் நிரம்பவுண்டாயினும் தேவைகருதி தேசாபிமானத்தை, தேச நேசத்தை, விடுதலையுணர்வை உண்டாக்கவல்ல கவிதைகளை வடித்தார். இயற்கையில் இனிய கவிகள் பாடவல்ல பாரதியார் தம் சக்தியை புது வழியில் திருப்பி உபயோகப் படுத்தியிருப்பது நம்மவர்க்கு ஒரு நல்ல வழியைக் கற்பிக்கிறது.

- வான்மதி -


முன்அட்டைப் படம்
கணேஷ்ராஜ்



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

செய்தி:-
சிறிலங்கா படையினருக்கு எதிரான போராட்டத்தில் புலிகளினால் தயாரிக்கப்பட்டது "பசிலன் 2000" இதற்கெதிராக பிரேமாவின் புதிய கண்டுபிடிப்பு "பிரேமாவின் மலக்குண்டு 90"



# பிரேமாவின் மலக்குண்டு

தெல்லிப்பளை வீதியில்
வலம் வந்த படையினருக்கு
கண்ணிவெடி வைத்ததில்
ஒரு பனை உயரம்தான்
கண்டதுவோ ஜீப்வண்டி!

ஜெனரல் என்ற புகழ் பெற்ற
உயர்பதவி வகித்திட்ட
சிறிலங்கா படைத்தலைவர்
ஆரியப் பெருமாளோ
புத்தா என்று சொல்லியபடி
போய்விட்டார் எமலோகம்!

சடங்குதான் செய்திடவே
எலும்புகள் தேவையென்று
தேடித்தான் பார்த்தனர்
தேறவில்லை ஓர் எலும்பும்!

துயருற்ற ஜே.ஆர் தான்
என் செய்வார் இதை நினைத்து
வெறும் பெட்டி வைத்துத் தான்
சடங்குதனை முடியென்று
ஆடர்தான் செய்தாரோ

அரசகூலிப் படையினருக்கு!

இனிமேலும் குண்டுகள்தான்
வெடிக்காமல் இருப்பதற்கு
என்னவழி செய்வதென்று
தெரியாமல் திணறித்தான்
பதவிதனை கொடுத்தாரோ
பிரேமாவின் கையிலே!

வீறுகொண்ட புலிகளை
வேறெந்த வழிதனில்
ஒழித்திடலாம் என நினைத்து
சிந்தித்தார் சிலநேரம்
நம் தலைவர் பிரேமாவும்.

நரி சார்ந்த மதி கொண்ட
பிரேமாவின் கரி மூளை
அணு குண்டு நிகரில்லா
ஒரு குண்டு நான் கண்டேன்

கொழும்பிலுள்ள கழிவுகளை
ஒழுங்காகச் சேகரித்து
விரைவாகச் செய்திடுவாய்




சிறிலங்கா மலக் குண்டை
என்றுரைத்தார் ரஞ்சனிற்கு
புலிகளை அழித்திடவே!

யாழ்நகர மக்களிற்கு
வாய் நிறைய பீ குண்டை
வீசி எறி என்றுரைத்தார்
மூக்கைத்தான் பொத்தியபடி
சிறிலங்கா படையினரோ
விமானத்தை பாவித்து
தூக்கித்தான் போட்டனரோ
பிரேமாவின் பீ குண்டை!

ஒருபோதும் மணமில்லா
யாழ்நகர வீதியெங்கும்
மூக்கரிக்கும்
பீ நாற்றம்
காற்றுடன்தான் அடித்ததுவோ!

பீ குண்டும் போட்டுத்தான்
பிரேமாவும் பார்த்திட்டான்
புலியும்தான் அழிந்திடுமா
சொல்லுங்கள் எம் இனமே!

-பெனோ-

அன்பென்று கொட்டு முரசே - அதில்
யார்க்கும் விடுதலை உண்டு
பின்பு மனிதர்களெல்லாம் - கல்வி
பெற்றுப் பதம் பெற்று வாழ்வார்.

- பாரதியார் -



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

# உனக்காக

ரமேஷ்

அந்தச் செய்தி கண்ணனுக்கு கிடைத்தபோது துடித்துவிட்டான். கற்பனைக் கோட்டை இடிந்து சிதைந்து காற்றோடு கலந்தன. கடந்த மூன்று வருடங்களாய் அவனது எண்ணங்களாய், கற்பனையாய், காவியமாய்... இன்று....

ஒரு கிழமையாய் பாடசாலைக்குச் செல்லாமல் அறையினுள் முடங்கிக் கிடந்தவன் ஒருவாறு தெளிவடைந்து பாடசாலைக்குச் சென்ற வேளை அவன் வகுப்பறைக்குள் காலடி எடுத்து வைத்தவுடனேயே அவனது மாற்றத்தைக் கமலாக்கா கவனித்துவிட்டா.

"என்னடா கண்ணன் எண்ணெய் கப்பலை எரியவிட்டவன் மாதிரி யோசிக்கிறாய்" என்று அவனைச் சீண்டினாலும் அவனது உள்ளுணர்வுகளை அவதானித்து பாடம் நடக்கும் போது எந்த நேரமும் அவனுடன் பகிடி விடும் அக்கா இன்று பேசாமல் இருந்து விட்டா.

சாப்பாட்டு இடைவேளை கண்ணனுக்காக கமலா அக்காவே என்றும் சாப்பாடு கொண்டு வருவது வழக்கம். தனியிடத்தில் இருந்து சாப்பிடும் பொழுது "கண்ணன் என்னடா நடந்தது" அக்கா கேட்டா.

"அக்கா மீனா..... அவள்...." கண்ணனால் முழுமையாகச் சொல்ல முடியவில்லை. கண்ணீர் அவன் விழிகளைத் திரையிட்டது.

"மீனாவுக்கு காசு கட்டியாச்சு எண்டு சொன்னனி. அவள் கெதியில வந்திடுவள்தானே. இனியென்ன இப்ப ஏன் அழுகிறாய்." அக்காவுக்கு என்ன பதில் சொல்வதென்று அவனுக்குப் புரியவில்லை. தன் சிறிய வயதுக் காதலைப் பற்றி அவன் அவளிடம் அளந்து வைத்திருந்தான்.

"அக்கா அவள் இனி இங்கு வரமாட்டாள். அவளுக்கு கொழும்பில கலியாணம் முடிஞ்சுது." கண்ணன் சொல்லி முடித்த போது அக்கா அதிர்ந்துவிட்டா. ஓமக்கா நான் காசு கட்டின ஏஜென்சி கூப்பிடப் போக அங்கை கலியாண வீடு நடந்துகொண்டிருக்காம்." கண்ணன் கூறியதை அக்கா நம்பாமல் "எடேய் உது கட்டுக்கதையாயிருக்கும். நீ நம்பாதை" என்ற வேளை, அவவை இடைமறித்து "இல்லையக்கா நான் எல்லாம் விபரமாய் அறிஞ்சிட்டன்." கண்ணன் உறுதியாகக் கூறினான்.

அக்காவால் கொஞ்ச நேரம் எந்தத் தீர்மானத்துக்கும் வர முடியவில்லை. "இவனை இப்படியே விட்டால் பைத்தியமாகி விடுவான்" என மனதுக்குள் நினைத்த அக்கா" கண்ணன் இதுதான் வாழ்க்கையின்ரை முடிவெண்டு நினைக்காதை. தலைக்கு வந்தது தலைப்பாகையோடு போயிட்டுதெண்டு நினை. உன்னைமாதிரி இலக்கண இலக்கியத் தோட கதைக்க என்னால ஏலாது. ஆனாலும் நீ இனியும் அவளை நினைச்சு அழுதுகொண்டிருக்காதை. இந்த "அடப்ற்" வகுப்பில இருக்கிற எல்லோரும் என்ன கூடப்பிறந்து வளர்ந்து இங்கை வந்தனாங்களோ இல்லை எண்டைக்கும் ஒண்டாய் இப்படியே இருக்கப் போறோமோ. பேசாமல் அவளுக்கு ஒரு "வெடிங்காட்" வாங்கி அனுப்பிப் போட்டு உன்ரை அலுவலகளைப்பார். வகுப்புத் தொடங்கப் போகுது வா. அங்கைபார் அவன் சப்பட்டை வாத்தி இண்டைக்கு வேளைக்கு வந்திட்டான். கூறிவிட்டு அக்கா விறுவிறென்று வகுப்புக்குள் போகத் தொடங்கினா. கண்ணனும் பின் தொடர்ந்தான். வகுப்பில் பாடம் நடக்கும் போதெல்லாம் கண்ணன் ஏதோ எழுதிக்கொண்டேயிருந்தான். வகுப்பு முடிந்து போகும் போது அக்கா கேட்டா "என்னடா ஏதோ கிறுக்கிக் கொண்டிருந்தாய்."

மீனாவின் முகவரிக்கு அவன் எழுதிய அந்தக் கடிதத்தை எடுத்து அதன் இறுதி வரிகளை மட்டும் அக்காவிற்கு மெதுவாக வாசித்துக் காட்டினான்.

அன்று உன்னோடு வாழவேண்டுமென்பதற்காக மட்டும் வாழ்ந்தேன். இனியும் வாழ்வேன். என்னை அழிக்க உன்னால் முடியாது. உன் கணவனும் உன் பிள்ளைகளும் நீயும் பார்க்கும் காலத்திலேயே உயர்வேன். இமயமலை போல. உனக்காக, நீ பார்க்க வேண்டும் என்பதற்காக.

அக்கா அவனக்கு தூரத்தே தெரிந்த ஈபில் கோபுரத்தைச் சுட்டிக் காட்டினா. அவனும் புரிந்து கொண்டவன் போல தலையை அசைத்துக் கொண்டே "மெற்றோ" பாதாள இரயில் நிலையத்துக்குள் இறங்கினான். ■

"கண்ணுடையோர் கற்றவர் - முகத்திரண்டு
புண்ணுடையோர் கல்லாதவர்."

(குறள்)



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

# பரலோகப் பயணம்

ஒவ்வொருவருக்கும் ஒவ்வொரு விதமான சிந்தனை.
அவரவர் அவரவரின் சிந்தனையை உலக ஏட்டில் பொறிப்பார்.
அத்தனையும் உண்மையும் அல்ல, அத்தனையும் சிறந்தது அல்ல
உலகம் வெற்றிடங்களால் நிரப்பப்பட்டது.
அவரவர் அவரவர்க்குத் தகுதியான வெற்றிடங்களை தெரிவு செய்வர்.
அவற்றிற்கு வர்ணம் பூசுவது அவர்களது கடமையாகும்.
ஆனால் சில மனிதர்களோ...
பூசப்பட்ட வர்ணங்களை புகழ்ந்து பேசுவதிலேயே தம்- வாழ்க்கையைக் கழிக்கின்றனர்.
அவற்றிற்குக் காரணம்
அவர்களுக்கு அது பிடித்தமானது, அவர்களால் அது முடியாதது.
இந்த ரீதியில்தான் மதங்கள் எழுந்தன.
வாழ்க்கை முறைகள் எழுந்தன, தத்துவங்கள் எழுந்தன.

இதுவே வாழ்க்கைப் பயணம்.
உறங்குவதற்கெனப் படுத்தேன் உறக்கம் வரவில்லை.
விழிகளை மூடினேன், அவை விழித்திருக்க விரும்பின.
இருளை விலக்கி வெளிச்சத்தைக் கொடுக்கும் விளக்கை அணைத்தேன் மறுபடியும் பயணம்.

படுத்திருப்பவர்களெல்லாம் உறங்கிவிட்டார்களா என்ன! கனவு காணலாம் நான்தான் இன்னும் காதலிக்கவில்லையே ஒரு பெண்ணை.... எப்படிக் கனிவாக இருக்கும். கற்பனைகளை வளர்த்துக் கொள்வது காரியங்கள் கவனிப்பின்றி மூழ்கிவிடுவதும் மனிதன் பல வீனம்.

**- சி. பாலன் -**

மனத்திற்குக் கட்டளை இட்டேன் படுத்துக் கொள் என்று. மறுத்தது.

அறிவுள்ள எவனும் தனக்குப் பொழுதுபோகவில்லை என்று சொல்லிக் கொள்ளான். ஏனென்றால் அவன் கூடத்தான் சிந்தனை உலாத்த வெளிக்கிடுகிறதே- எனவே உறக்கம் மறுக்கிறது. எனவே அந்த நேரம் சிந்தனை செய்வோம் சிம்மாசனத்தில் பொறிப்போம்-சிந்தனை எதைப்பற்றி உலகத்தைப் பற்றியா, இல்லை அதில் வாழும் மனிதர்களைப் பற்றியா, கண்டுபிடிக்க முடியாத உண்மைகளை உலகிற்கு எடுத்துக் கூறவா, எதைப்பற்றிச் சிந்திக்கலாம். நான் என்ன வேதாந்தியா வேந்தனைப் பற்றிச் சிந்திக்க; மாறாகச் செயற்படுபவன். தமிழ் மக்கள் படும் அவல நிலை குறித்துச் சிந்திப்போம்.

வாகனத்தில் ஏறினேன் எங்குதான் செல்வோம், பரலோகம் செல்வோம். பரமனையும் அவன் பட்டத்துராணியையும் பார்க்கலாம். எடுத்துக்கூறலாம் என்நாட்டு நிலைமைகளை. இந்நாட்டின் அகதி நான் என் நாட்டில் வசிக்க முடியாது. இதுவரை உம்மை நான் அழைத்ததில்லை, இப்போது தான் உம்மை அழைத்தேன். எத்தனையோபேர் உம்மை அழைத்தனர், நீர் ஏன் ஏற்க மறுத்தீர், நீர் குடிகொள்ளும் கோயில்களில் அவர்கள் ஓலக் குரல் உன் காதுகளுக்கு கேட்கவில்லையா! என்பதைக் கொடுத்து வாங்கிக்கொண்டு வரலாம் வரம். எனும் எண்ணத்தில் திருப்பினேன் வாகனத்தைப் பரலோகத்துப் பக்கம். கண்ணிவெடி வைத்தார்களோ பாதையெல்லம் பள்ளமும் திட்டியுமாக இருந்தன. என் வாகனத்தை 50 கி. மீ வேகத்தில் விட்டேன். ஏனென்றால் வேகம் அதிகமானால் சக்கரம் உடைந்து பள்ளத்தில் வீழ்ந்துவிடும், எத்தனை பள்ளம் திட்டி எப்படித்தான் போனார்கள் பரலோகம் பரதேசிகள்! சிந்தித்தேன். முயன்றால் முடியாதது என்ன முடியாத காரியம் எதுவும் இல்லை என்பது என் தத்துவம்.

பாதைகள் பூகம்பத்தில் புவியோடு வெடித்திருப்பதுபோல் பல வெடிப்புக்கள். ஆபத்து, ஆபத்து எப்படித்தான் போவது. ஏதோ ஆசைவைத்துவிட்டேன் அடைவோம் பரலோகம். மேலும் தொடர்ந்தேன்; வாகனத்தை மெதுவாகச் செலுத்தினேன். வாழ்க்கையை வெறுத்த துறவிகள் எல்லாம் இந்தப் பயணத்தை மேற்கொள்கிறார்கள் என்றால் அவர்கள் எவ்வளவு போற்றப்படவேண்டியவர்கள். இந்தப் பயணத்திற்காக மனிதன் மதப் புத்தகங்களையெல்லாம் புரட்டுகிறான். நாங்களும் தான் கேட்கிறோம் தேவலோகத்தில் தேவேந்திரன் சிம்மாசனத்தில் இருக்க, இரதி, இரம்பை, ஊர்வசி போன்றோர்

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

ஆட்டம் ஆகா, ஆகா இதைப் பார்க்கக் கொடுத்துவைக்க வேண்டும் என்று எல்லாம் எண்ணுகிறோம். ஆனாலும் பாரீசில் ஸ்ராஸ்பேக் சென்அன் ரனீசில் அரைகுறை ஆடை அணிந்து, அழகிகள், அழகரிசிகள் வீதிக்கு வீதி அழகோ அழகு, ஆகா பூமியில் ஒரு சொர்க்கம், விலைக்கு ஏற்ப சரக்கை வாங்கலாம் இவற்றையெல்லம் மறந்துவிடுகின்றோம். முற்றும் துறந்த முனிவனும் முந்நூறு பிராங் கொடுத்துச் செல்கிறான் என்றால் என்ன அர்த்தம்? சொர்க்கம் ஒன்று இங்கே இருக்கின்றது என்னும் எண்ணத்தில் அவரை மட்டும் குறை கூறிவிட முடியுமா முற்றும் துறந்த முனிவர் என்று? ஆசை அது அவருக்கு இல்லை, ஏன் இல்லை? கடவுளைப் பார்க்கும் ஆசையும், வரம் வேண்டும் ஆசையும், சொர்க்கத்தில் வாழும் ஆசையிலும்தானே அவர் காட்டில் கடும் தவம் புரிகிறார். ஆக மொத்தம் ஆசைகளைத் துறந்த முனிவர் என்று அவரைக் கூப்பிடுவது தப்பு, தப்பு, தப்பு.

அந்த முனிவனும் மானிடப் பெண் கர்ப்பத்தில் இருந்துதான் வந்தான் என்பதை மறந்துவிடக் கூடாது. உடலிலே ஓடும் செங்குருதி மனித மனதிலே ஓடும் ஆசை உலகில் உள்ளவர் அனைவருக்கும் உள்ள அனுபவிக்கும் ஆசை.

நாம் நல்ல முறையில் உலகில் வாழ்ந்தால்தான் கிடைக்கும் சொர்க்கம். ஆகவே பரலோகம் போகும் ஆசையிலும் தானே பக்தன் தன் பயணத்தை சமவெளிக்குத் திருப்புகிறான். அங்கேயும் பாரேன் உன் ஆசை அது தள்ளப்படவில்லையே! ஆசை ஆசை அதுதான் என்ன? அளவு கடந்த ஆசை அழிவிற்குக் கொண்டுவரும் ஆசை. அதுதான் மண்ணாசை, பெண்ணாசை, பொன்னாசை அத்துடன் அர்த்தமுள்ள இந்து மதம் புகழாசையையும் சேர்த்து விட்டது. உலகம் ஒன்றை மட்டும் மறந்து விட்டது. அதுதான் பரலோக ஆசை. ஆகமொத்தம் மண்ணாசை, பெண்ணாசை, பொன்னாசை, புகழாசை, பரலோக ஆசை. ஆசை, ஆசை ஐந்து ஆசை. ஏ..... மனிதனே அத்தனை ஆசையையும் சுமந்து செல்கிறாயே சுமையாக இல்லையா உனக்கு.

என் பயணம் எங்கோ சென்று விட்டது. இல்லை தடைகளில் நிற்காமல் சென்றுவிட்டேன். வருகின்ற வளைவில் திரும்ப வேண்டும். அதுசரி பரலோகப் பயணத்தை கனவில் பார்ப்பதுவே எவ்வளவு பாரமான சரக்காக இருக்கிறது. அது என்ன பாரிசில் இருந்து சுவிசுக்குப் போவதா? அதுவும் எவ்வளவு பயணம் கள்ள எல்லைகளைத் தாண்டி. இது என்ன சுவிசா சுபீட்சம், சிக்கல்கள் ஆயிரம், ஆயிரம். சும்மாவா சொன்னார்கள் பாவியர் போகுமிடமெல்லம் பள்ளமும் திட்டியும் என்று. உலகில் அதி பயங்கரவாதத்தைச் செய்தவர்களே பின்னுணர்ந்த பாவத்தை, பரலோகப் பயணம் மேற்கொள்கிறார்கள். ஆக பாவங்கள் நரகத்தில் இருப்பவர்களுக்கு மட்டும் சொந்தமா என்ன?

அந்தச் சமயத்தில் அரசியல் ஆசனத்தில் அமரும் காலைப் பிடித்தால் தானே அடுத்த தேர்தலில் ஒரு தொகுதியிலாதல் நிற்கலாம். அமைச்சரின் சிபாரிசு இல்லையானால் எப்படிப் பக்தர்களை ஆண்டவன் பார்க்க முடியும். பரமன் காலில் விழுவதும் புரட்சித் தலைவி காலில் விழுவதும் ஒன்றல்லவா. சாஸ்திரிகள் கூட செல்வியிடம் செல்கிறார்களாம். மனிதன் காணாத சாஸ்திரிகளா என்ன? எமக்கெல்லாம் கடவுள் மாதிரி அவன்தான் மகாகவி பாரதி. அவர் கண்ட புதுமைப் பெண்ணல்வா அவர். அவன் கனியிலும் இனிமை கூடிய தமிழ்.. அதனால்தான் ஆதரித்து அணைக்கின்றா. ஆமாம் அணைக்கட்டுப் பிரச்சனை ஒன்று நடக்கின்றதாமே. இலங்கை வேந்தன் இராவணன் மட்டுமா அரக்கன். இந்தியன் என்ன புத்தனா, காந்தியா, நபிகளா. இதுவரை இராமன் காலம். இப்போ இராவணன் காலம். அதுதான் ஆரியர்களுக்கு சீ சீ ஆடு மாடு மேய்த்தவர்களுக்கு ஆடு மாடு விற்கமுடியாது என்ற கவலை. ஆடு மாடு மட்டுமா வரும் போது கொண்டு வந்தனர். அத்துடன் திராவிடனுக்குப் பரிசுப் பொருட்களாக விக்கிரகங்களையும் புராணங்களையும் அல்லவா சேர்த்துக் கொண்டு வந்தனர். தமிழன் என்ன தரங் குறைந்தவனா? இராவணனுக்கும் இராமனுக்கும் உள்ள வேற்றுமை என்ன? இராவணன் வெளியாகக் கொல்வான், இராமன்கள் தவம், புனிதம் எனும் பெயரில் கொல்வார்கள். இதுதான் இவர்கள் இருவருக்கும் உள்ள வேற்றுமை. ஐந்தறிவு ஜீவன்களின் உயிரை வாங்கும் அளவிற்கு சென்றிருக்கிறதே இவர்களின் ஆண்டவன். இரக்கம் என்னும் பெயர் இலா அரக்கன் இவருக்கு மட்டும் சொந்தம் இல்லையா? அவர் செய்வது சட்டமன்றத்திற்குச் செல்லாது எனில் எதிர்க்கட்சி இல்லாத அரசாங்கம் தானே அது. ■

(தொடரும்....)

---

நீ சந்திக்கும் கடைசி மனிதனிடமும் உனக்குத் தெரியாத ஏதோ ஓர் விடயம் இருக்கும்.

- சோக்கிரட்டீஸ் -


தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

# எமது தேசமும் சுய உற்பத்தியும்

யாழ்ப்பாணத்திலிருந்து
செல்வி. சுகந்தினி குணசிங்கம்

இயற்கை அன்னை கொஞ்சி விளையாடும்; வளங்கள் குறைவின்றிக் கிடைக்கும் தேசம். காட்டையும் மேட்டையும் பொன் விளையும் பூமி யாக்கும் உழவர் குழாம் நிறைந்த பூமி. காலங் காலமாக அந்நியராலும் சக இனத்தவர்களாலும் அடக்கப்பட்டு, எம்மின மூத்த தலைவர்களாலும் பதவி வெறிபிடித்தவர்களாலும் ஏமாற்றப்பட்டு கைகட்டி வாழ்ந்த தமிழினம் உணர்வு கொண்டு எழுந்து நிற்கும் காலமிது. உண்ண உணவின்றி, உடையின்றி, வீடின்றி இன்று தமிழன் காடுமே டெல்லாம் அலைந்து கொண்டிருக்கின்றான்.

ஏமாற்றப்படுகின்றோம் என்பதனை ஆரம்பம் முதல் கொண்டு கருத்திற் கொள்ளாமல் தட்டிக் கழித்து வாழ்ந்ததனால் எமக்கு இன்று இந்த நிலை. இப்போதுதான் எம்மைப்பற்றியும் எமது நிலை பற்றியும் சிந்திக்கத் தொடங்கியுள்ளோம். தமிழினம் கடந்த 40 ஆண்டுகாலமாக சிங்கள ஏகாதிபத்திய அரசுடன் முழு அளவிலான ஒரு போரில் ஈடுபட்டுக் கொண்டிருக்கும் வேளையில் மறுமுனையில் இனவாத அரசின் பொருளாதாரத் தடையால் கடந்த 1 1/2 வருடமாக சொல்ல ணாத் துன்பங்களை அனுபவித்து வருகின்றனர்.

உணவின்றி பெற்றோர் முன் குழந்தைகள் இறப் பதும், குழந்தைகள் முன் பெற்றோர் இறப்பதும் சகஜ நிலையாகி விட்டது. எமது முதுகெலும்பு களை நிமிர்த்த முடியாத இந்த வேளையிலாவது இவற்றிலிருந்து தப்பிக்க மாற்றுவழிகளை நாட வேண்டிய கட்டாயத்திற்கு நாம் தள்ளப்பட்டுள் ளோம்.

ஆயுதத்தால் மட்டுமல்ல எமது மனோ உறுதி யாலும் சுய உற்பத்தி மூலம் பொருளாதார தேவைகளை நிறைவு செய்வதன் மூலமும் சிங் கள அரசிற்கு நாம் பாடம் கற்பிக்க வேண்டும். பதினெட்டாம் நூற்றாண்டில் ஐரோப்பாவில் ஏற் பட்ட கைத்தொழில் மறுமலர்ச்சி, ஐரோப்பாக் கண்டத்தின் சரித்திரத்தையே மாற்றியமைத்தது என்பது கண்கூடு. ஆசிய நாடுகளைப் பொறுத் தவரை போதிய வளங்கள் கொட்டிக் கிடப்பினும் இப்பிராந்தியங்களில் நிலவிவரும் அரசியல், சமூக, பொருளாதார நிலைமைகளினால் அந்நி லையை எட்டமுடியவில்லை. ஆயினும், தாய் வான், கம்பூச்சியா போன்ற நாடுகள் தமது இடைவிடாத முயற்சிகளால் முழு அபிவிருத் தியை நோக்கிச் சென்று கொண்டிருக்கின்றன.

வடகிழக்குப் பகுதிகளில் உற்பத்தி செய்யப்படும் நெல் எமது முழு தேவையைவிட அதிகமானது என்பது புள்ளி விபரங்களில் இருந்து அறியக்கூ டியதாக உள்ளது. குறைந்த காலத்தில் கூடிய விளைச்சலைத் தரக்கூடிய நெல்லினங்களை தற்போதைய சூழ்நிலையில் பாதுகாப்பாக உள்ள பகுதிகளில் பயிரிட விவசாயிகள் முன்வர வேண் டும். அத்துடன் காய்கறி உற்பத்தியில் நாம் அதிக அக்கறை செலுத்த வேண்டும். இயல்பா கவே எம் தேசத்தில் மலிந்து கிடக்கும் மரவள் ளிக் கிழங்கு, முருங்கையிலை, கீரைவகைகளை இளஞ்சந்ததியினருக்கு அறிமுகப்படுத்தும் வகை யில் பாடசாலைகளில் விவசாயக்கல்வி அமைக் கப்பட்டு போதிக்கப்பட வேண்டும். இயற்கை உரங்கள் எம்மிடம் நிறையவே இருக்கின்றன. அந்தஸ்து, படிப்பு, சாதி, மத பேதங்களைக் கடந்து வீட்டுத் தோட்டங்கள் செய்வதிலும், ஆடு வளர்ப்பு, கோழி வளர்ப்பு, மாட்டுப் பண் ணைகள் அமைத்தல் மூலம் சத்துள்ள போதிய உணவுகளை நாம் பெற்றுக் கொள்ளலாம். இயற்கை அன்னை எமக்குத் தந்த வற்றாத செல்வம் கற்பகதருவாம் பனை, பல தலைமு றைகளுக்கு வாழ்ந்து வாழும் காலத்திலும் வீழும் காலத்திலும் மனிதனுக்கு உபயோகப்படும் பனை யிலிருந்து எத்தனையோ விதமான சிறந்த பய னைப் பெறமுடியும். ஆயுதப் போராட்டத்தால் மட்டும் விடுதலை பெற்றுவிட முடியாது, மேலும் பெற்ற விடுதலையை ஆயுதத்தினால் காப்பாற்ற முடியாது. அபிவிருத்தியானது போராட்டத்தின் முதுகெலும்பாக விளங்குகின்றது. பொருளாதார அபிவிருத்திக்கு சுய உற்பத்தி அவசியம். போராட்ட நிலைகளுக்கேற்ப மக்கள் மாறவேண் டும். அதுபோல் உற்பத்தி முறைகளும் மாறவே ண்டும். அமெரிக்க ஏகாதிபத்திய அரசினால் உலகில் எழுந்து நிற்கவே கூடாதுஎன அணு குண்டு வீசி அழிக்கப்பட்ட ஜப்பான் தன்னம்பிக் கையுடன் தலைநிமிர்ந்து இன்று அமெரிக்காவு டன் வியாபார ஒப்பந்தங்களைச் செய்து கொள் கின்றது.

ஆயுத போராட்டத்தின் மூலம் எழுந்து நிற்கும் தமிழினம் பொருளாதாரத் தடைகளை முறியடித்து சிங்கள ஏகாதிபத்தியத்தின் முன்னும் உலக அரங்கிலும் எழுந்து நிற்க வேண்டும். ■

www.tamilarangam.net

# திறமை

1. எவன் ஒருவன் தன் திறமையையும் தகுதியையும் புகழ்கிறானோ அவன் அந்த அளவிற்கு பலரால் தள்ளப்படுவான். உன் திறமைக்கு நீயே விலை பேசாதே. அது உன்னையே தாழ்த்திவிடும்.

2. உன் திறமையைப் பாராட்ட இந்த உலகம் எழும் அப்போது உன் பொறுமையைப் பிடித்துக் கொள் அதுவே உன் திறமை. உன் திறமையை விலைகொடுத்து வாங்கப் பல வியாபாரிகள் வருவார்கள். அப்போது உன் திறமையை நீயே தாழ்த்திவிடு. ஏனென்றால் அது வியாபாரிகளுக்கு விற்கப்படக் கூடாது.

3. உன் திறமைக்கு உலகம் பரிசு கொடுக்க வரும். அப்போது உன் திறமை என்னவென்று கேள் ஏனென்றால் இன்னும் படிகள் நிறைய உண்டு ஏறுவதற்கு.

4. உன் திறமை உலகுக்கு உபயோகமாக இருக்க வேண்டும். அப்பொழுதுதான் உலகம் உன்னை நினைவில் வைத்திருக்கும்.

5. உன் திறமை உலகை வாங்க வேண்டும் என்று இருக்கக் கூடாது. உன் திறமை உலகுக்கு கொடுக்கப்படவேண்டும். அப்பொழுதுதான் உன் பெயர் உலக ஏட்டில் பொறிக்கப்படும். இப்பொழுது உன் பெயரை மறந்துவிடு. ஏனென்றால் உன்பெயரை உலகம் உனக்கு நினைவு படுத்திக்கொண்டிருக்கும்.

6. உன் இலக்கு எப்போதும் உலகை நோக்கியே இருக்க வேண்டும். அந்தரத்தில் நின்று சுற்றும் உலகம் உன்னில் நின்று சுற்றத் தொடங்கிவிடும். இதுவே திறமையின் அழகு.

- பாலன் -

மரங்கள் கேட்கின்றன மனிதர்களைப் பார்த்து எங்களால் எத்தனையோ சிலுவைகளைச் செய்ய முடிகிறதே. ஏன் உங்களால் ஒரு இயேசு ஆக முடியவில்லை.

- புதிய தூண்கள் -

# விடியலுக்கு விளக்கு

விடியலின் வெளிச்சத்திற்கு
விளக்கு வைத்து வெளிச்சத்தைக் கலைப்பவர்கள்
காலப் பந்தயத்தில்
பரிசுகளைத் தட்டிச் சென்றவர்கள்
விளக்கம் கேட்டவர்கள்
விளங்கிக் கொள்ளாத் தன்மையால்
விடியலுக்கு விளக்கு வைத்துவிட்டனர்.

பிறந்த நாட்டை பறந்த குருவி போல்
மறந்து விட்டோம் என்றவர் எல்லோரும்
மன்றங்களில் ஏறித்
தம் தலைகளைத் தலைவன் என்று பொறித்தனர்.
விட்ட உலகின் ஆசனங்களை
விஞ்ஞான உலகில் தேடுபவர்கள்
வியாபாரம் என்ற அளவிற்கு கலாச்சாரம் வளர்ப்பவர்கள்
என்று முத்திரை பதித்தனர்
கற்றவர்கள் பலர் கண்டவுடன்
கட்டிப் பிடித்துக் கட்டிலறைக்குச் சென்றனர்
கலாச்சாரத்தைக் கற்பழிக்க
உள்ளிருக்கம் மூச்சு முத்தமிழ் - என்றவர்
தம்பிள்ளைகளுக்கு கற்றுக் கொடுக்க
ஏன்தான் மறந்தனரோ.

சந்திரனை இரவில் பார்த்து இரசித்தவனுக்கு
பகல் சூரியன்
கண்ணைக் குத்தத்தானே செய்யும்.
தன்மானத் தமிழன்
தலைகுனிந்து நடக்கின்றான்
தரங்கெட்டது தமிழா.
தரத்தைக் கெடுத்தவன் தமிழனா?
தாழ்த்தும் உயர்த்தும் பண்பு - தமிழனிடையே
தலைவிரித்தாடுகின்றது.
புகழ்ப் பையினுள் கையைப் புகுத்தும் எண்ணம்
தம் பிள்ளைகளுக்கும் கற்றுக் கொடுத்து விட்டனர்.

தமிழே தமிழே
எம்மைப் பெற்றெடுத்து
பேணி வளர்க்க மறந்தாயோ - தாயே
சேயின் நிலையை நிமிர்ந்து பாராயோ!

- பாலன் -

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

* இந்தியாவின் தலைசிறந்த எழுத்தாளர்களில் ஒருவரான வி. ஸ். காண்டேகர் அவர்களின் "கூட்டுக்கு வெளியே" தமிழ் மொழி பெயர்ப்புத் தொகுப்பிலிருந்து.

# இரண்டு உலகங்கள்

தன் தொழிலில் பெருமை கொள்ளாதவன் இந்த உலகத்திலே எவனுமில்லை. நான்கு வாயாலும் ஓயாமல் வேதாத்தியன்னம் செய்து அலுத்துப் போய், பிரம்மதேவன் சத்திய லோகத்தை உத றித் தள்ளிவிட்டு பூலோகத்துக்கு வந்து ஒரு குயவனைச் சந்தித்தால், அப்போது அவ்விருவ ருக்குமிடையே தொழில் முறையில் எவ்வளவு வேடிக்கையான தர்க்கம் நடக்கும்! அந்தத் தர்க் கத்திலே குயவன் தோற்க்கமாட்டான் என்பது நிச்சயம். மனித ஜீவன்களை தான் சிருஷ்டித்த பெருமையைப் பற்றிப் பிரமன் பீற்றிக்கொண்டால், குயவன் பரபரவென்று விதம் விதமான சட்டிபா னைகளை எடுத்துவைத்து, அவனுடைய நான்கு வாயையும் பொத்த வைக்காமல் இருக்கமாட் டான். அந்த பிரம்மதேவன்கூட இதற்குப் பதில் சொல்ல மாட்டாமல் திகைக்கத்தான் வேண்டும். காரணம்: தன் கலையின் கீர்த்தி கோபுரத்துக் கலசம் என்று நினைத்து அவன் எந்த மனுஷ்ய ஜீவன்களைச் சிருஷ்டித்தானோ, அவனுடைய தலை பெரும்பாலும் சட்டிபானையைப் போலவே உபயோகப்டுகின்றது என்ற அனுபவம் யாருக்குத் தான் இல்லை?

தன் தொழிலிலே ஒவ்வொருவனும் கொண்டுள்ள இந்தப் பெருமை வரட்டு ஜம்பமாகாது. ஆணின் அழகிற்கு உண்டான பெருமையில் பாதிப்பங்கை நாவிதனுக்கும், பெண்ணின் அழகுக்கு ஏற்பட்ட சிறப்பில் பாதியைத் தையல்காரனுக்கும் பங்கிட் டுக் கொடுத்துவிடுவதுதான் சரியான முறை. ஊரிலுள்ள நாவிதர்கள் வேலை நிறுத்தம் செய் தால், தம் கணவன்மார்களின் ஜடாவாரங்களைக் கண்டு, பெண் மணிகள் நாலுமுழம் தூரம் எட்டி நிற்பார்கள். தையல்காரர்கள் 'ஒத்துழையாமை' யில் முனைந்துவிட்டால் நேற்றுச் சுபத்திரையா கத் தோன்றிய தன் மனைவி இன்று இடும்பை யாகிவிட்டதைக் கண்டு ஒவ்வொரு கணவனும் விவாகரத்தின் அவசியத்தை ருஜுப்படுத்த தயங் கமாட்டான்.

குமாஸ்தாக்களும் புரோகிதர்களும் பலதடவை தம் தொழிலை நிந்திப்பதைக் காணலாம். ஆனால், அதுகூட அவர்கள் தங்கள் தொழிலில் கொண்டுள்ள அதிக பற்றின் உருவழித் தோற்றம் தான். தாய் எத்தனையோ தடவை தன் பெண்ணை வேடிக்கையாக "இந்த இழவெடுத்த பெண்!" என்று சொல்வதில்லையா? அதுபோலத் தான் இது. கச்சேரியில் குமாஸ்தாவையும், சுடுகாட்டில் புரோகிதனையும் பாருங்கள்! அப் போது அவர்கள் ஜனங்களை எவ்வளவு அலட் சியமாகப் பார்க்கிறார்கள்! "ஞாபகமிருக்கட்டும், ஐயா! இந்தப் பேனாவின் ஒரு கிறுக்கலினால் உங்கள் கழுத்தை வாங்கும் சக்தி என்னிடம் இருக்கிறது!" என்கிறான் குமாஸ்தா. "என் மந் திரத்தில் ஓர் அட்சரம் பிசகி விட்டதோ, அவ் வளவுதான்; செத்துப்போன உங்கள் உறவினன் சொர்க்கத்திலிருந்து ஒரேயடியாகப் பல்டியடிக்க வேண்டியதுதான்!" என்று சொல்பவன் போல நடந்துகொள்கின்றான் புரோகிதன்.

தன் தொழிலில் மனிதனுக்கு உண்டாகும் இந்த விசித்திரமான பற்றுக்குக் காரணம் குருட்டு அகங்காரமா, தற்காப்பு எண்ணமா அல்லது வேறு ஏதாவதா என்பதைத் தீர்மானிப்பது மனி தத்துவ சாஸ்திரிகளின் வேலை. ஆனால் சினிமா நடிகைக்குத் தன் கந்தல் கூளமான படங்களைப் பார்ப்பதில் எவ்வளவு பெருமை, ஓர் ஏழைச் சமையற்காரிக்கும் தான் சமைத்து சுவையற்ற பண்டங்களைப் பரிமாறும் போது உண்டாகின்றது என்பதிலும் ஐயமில்லை.

இந்த மனித இயல்புக்கு 'அண்ணா வாத்தியார்' மட்டும் எப்படி விலக்காக இருப்பார்? அவர் நேர்மையானவர் சொத்து சுதந்திரமில்லாத ஏழையானாலும், பிறருக்கு உதவுவதில் அவ ருக்கு வெகு ஆனந்தம். அந்த ஊர் ஹரிஜனப் பையன் பி. ஏ ஆனான். அந்தச் செய்தியை அறிந்தது முதல் அவர் மனம் காற்றில் மிதந்தது. கையில் தந்தியை வைத்திருந்த அவர் கண் முன்பு பழைய சம்பவங்கள் கூத்தாடின.

பத்து பதினைந்து வருடங்களுக்கு முந்திய செய்தி: சாயங்காலம் பள்ளிக்கூடம் விட்டதும் வீட்டுக்கு வந்து தேநீர் அருந்துவதும், 'அரிசி பொறுக்கட் டுமா என்ன?' என்று வேடிக்கையாக மனைவி யைக் கேட்பதும், அவள் நகைத்துக் கொண்டே, 'எதுக்கு இப்படியெல்லாம் கேட்கின்றீர்கள்?' என்று பேசினால், மனைவியைப் பொறுக்கியெ டுக்கும்போது கணவன் புத்திசாலித்தனம் காட் டிவிட்டால், அப்புறம் அவன் அரிசி பொறுக்க வேண்டியதில்லை!' என்ற சமத்காரமாக ஒரே பதிலை அளிப்பதும் -இவைதாம் அண்ணா வாத் தியாரின் அன்றாட வேலைகள். அவர் டிராயிங் ஆசிரியரும் கணவரும் ஆனதிலிருந்து இந்தச் செயல் விடாமல் தொடர்ந்து வந்தது. இந்தப்

www.tamilarangam.net

புளிச்சுப் போன பேச்சில் அவருக்கோ அவர் மனைவிக்கோ சலிப்பு உண்டானதில்லை. புத்தகத்தில் வைத்துள்ள மயிலிறகை மீண்டும் மீண்டும் பார்ப்பதால் சிறு குழந்தைக்கு எப்போதாவது வெறுப்புத் தோன்றுகின்றதா? ஏதாவது ஒரு விதத்தில் ஒவ்வொருவனும் சிறு குழந்தையாகத்தான் இருக்கிறான்.

மாலை வேளையில் அருகிலுள்ள குன்றுக்குச் சென்று அண்ணா பத்திரிகை படிப்பது வழக்கம். அவருக்கு இயற்கை அழகைக் காண்பதில் ஒரு பித்து. குன்றின் மீது அமர்ந்தவாறு அவர் சுற்றுப் புறத்தை பார்ப்பார். எங்கும் ஒரே பசுமை! பசுமையிலும் பலவிதமான அழகு! பசும் புல்; முந்திரி இலை; பனையோலை; அருகிலுள்ள குளத்துப் பாசி. ஒரு சிறு குழந்தைபோல அவர் அந்தப் பசுமைகளை மாறிமாறிப் பார்த்தவண்ணம் உட்கார்ந்திருப்பார்.

அண்ணாவுக்குக் குழந்தை குட்டிகள் இல்லை. உறங்கிக் கிடந்த அவருடைய சித்திரக் கலைக்கு ஊக்கம் தரும் ஜீவனும் இல்லை. அதனால் அவருடைய மெல்லுணர்ச்சிகள் யாவும் சிறைப்பட்டனபோல் இருந்தன. குன்றிலே தனிமையில் பத்திரிகை படிக்கும் போது அவருக்கு ஏதோ சிறிது ஆறுதலாக இருக்கும். பத்திரிகையில் எந்தச் செய்தியானாலும் சரி, அது அவர் கண் முன்பு உருவாகும். இன்ன குளத்தில் ஹரிஜனங்களைத் தண்ணீர் மெள்ள விடவில்லை என்ற செய்தியைப் படித்தவுடனே, 'நாம் இங்கே வீணாகக் காலம் கழிக்கின்றோம். நமக்கோ பிள்ளை இல்லை, குட்டியில்லை; அந்த ஹரிஜனங்களின் சார்பாக நாம் போராடினால் எவ்வளவோ நன்மை அல்லவா?' என்று நினைப்பார்.

கணேசன் என்ற ஒரு ஹரிஜனச் சிறுவன் குன்றின் மீது மாடுமேய்க்க வருவான். ஒரு சமயம் மந்தையிலிருந்து வெறிபிடித்த ஓர் எருமைக்கடா ஒரு கன்றுக்குட்டியை முட்டிச் சண்டைக்கு இழுத்தது. கன்றுக்குட்டியைத் தப்பவைப்பதற்காக அந்தச் சிறுவன் நடுவில் வந்தான். ஆனால் ஆறு ஏழு வயதுள்ள அந்தப் பையனுக்கு எவ்வளவு சக்தி இருக்கும்? அவன் பயந்து போய்க் கூச்சல் போட்டான். ஒரு பாறை மீது பத்திரிகை படித்த வண்ணம் உட்கார்ந்திருந்த அண்ணாவின் காதில் அந்தக் கூச்சல் விழுந்தது. அவர் அவனிடம் ஒரே ஓட்டமாக ஓடினார். சமயத்தில் போய்ச் சேர்ந்தார்.; இல்லாவிட்டால் அந்த எருமைக்கடா கணேசனை முட்டித் தரையில் வீழ்த்திக் கண்டபடி உதைத்துத் தள்ளியிருக்கும்.

ஆறு ஏழு வயதுள்ள ஒரு கெட்டிக்காரப் பையன் பத்துப் பதினைந்து மாடுகளை மேய்ப்பது அண்ணாவுக்கு மிகவும் ஆச்சரியமாகத் தோன்றியது. அவர் கணேசனுடைய வீட்டுக்குப் போய் அவன் தந்தைக்குச் சமாதானம் சொல்லி, மாடு மேய்ப்பதால் அவனுக்குக் கிடைக்கும் வருமானத்தைத் தாமே கொடுப்பதாக ஒப்புக்கொண்ட பிறகுதான் கணேசன் ஆரம்பப் பள்ளியில் கால் வைக்க முடிந்தது. அங்கே ஒரு மடிசஞ்சி உபாத்தியார் இருந்தார். கையில் பிரம்பைக் கொண்டு அடித்தால் தீட்டுப்படுமென்று, அவர் கணேசின் உடல் மீது ரூல் தடியையே வீசி எறிவது வழக்கம். ஒரு தடவை உபாத்தியாரின் இந்தத் தடிவீச்சுக்கு பயந்து வீட்டுக்கு ஓடிப்போன கணேசன் எவ்வித்திலும் மீண்டும் பள்ளிக்கூடத்து வழியில் கால் வைக்கத் தயாரில்லை! கடைசியில் அண்ணா, இந்தப் புறம் ஆசிரியரை மிரட்டியும், அந்தப் புறம் கணேசனைத் தட்டிக்கொடுத்தும் அவனை ஒழுங்காகப் பள்ளிக்கூடம் வரச் செய்தார்.

---

■ தன் சிஸ்யனான அலெக்ஸ்சாண்டரை போரில் ஈடுபட வேண்டாம் என தடுத்து நிறுத்த முடியாது என உணர்ந்து கொண்ட அரிஸ்டாட்டில் இறுதியாக அவனிடம், நீ வென்று வரும் நாடுகளில் இருந்து அறிஞர்கள், மேதைகள், தத்துவ ஞானிகளின் ஏடுகளை எனக்குப் பரிசாக கொண்டுவா என்றார்.

■ மனிதர்கள் எப்போதும் தங்கள் வசதிக்கேற்றபடிதான் பிறரை தெரிவு செய்வார்களே ஒளிய பிறரின் வசதிக்கேற்ப தங்களை தெரிவு செய்வதில்லை.

- பாலன் -



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

பண்டிகை பருவங்களில் கணேசன் அண்ணாவின் வீட்டுக்கு வருவான். அவனுக்கு ஏதாவது இனிய தின்பண்டம் கொடுக்கும்படி அவர் வீட்டிலே சொல்வார். பையன் முற்றத்தில் வந்து நிற்பான்; அவர் பிடிவாதம் பிடித்து அவனைத் தாழ்வாரத்தில் உட்கார வைப்பார். அவனுக்கு புத்தகங்கள், துணிமணிகள் எல்லாம் வாங்கிக் கொடுப்பார். கிராமத்து வம்பர் மகாசபையில், அவர் சீக்கிரமே அந்தப் பையனை ஸ்வீகாரம் செய்து கொள்ளப் போவதாகப் பேச்சு உலவியது.

ஆனால் இப்படிப்பட்ட பேச்சைக் காதுகொடுத்துக் கேட்க அவர் அத்தனை லேசானவர் அல்ல. தம் மெல்லுணர்ச்சிகளைப் பொழிவதற்குரிய பாத்திரம் அவருக்கு கிடைத்திருந்தது. கணேசன் வகுப்பில் எப்போதும் முதல்வனாக இருந்தான். உரிய காலத்தில் எஸ். எஸ். எல். ஸியில் தேறினான்.

அப்புறம் நான்கு வருடங்கள் கழிந்தன. அரசாங்கத்தால் உபகாரச் சம்பளம் அளித்ததால், அவனுடைய முழுப் பளுவும் அண்ணாவின் மீது விழவில்லை. ஒரு தடவை அவன் பம்பாய்க்கு புறப்பட்ட போது அவனுக்கு பணம் தேவையாக இருந்தது. அண்ணாவிடம் பத்தே ரூபாய் இருந்தது. அதில் ஒன்பது ரூபாயை சந்தோசமாக அவனிடம் கொடுத்தார். அவன் அதை வாங்கிப் பையில் போட்டுக் கொண்டவுடனே, விக்கி விக்கி அழலானான். அவனைச் சமாதானப்படுத்துவதற்குள் அண்ணாவிற்குப் போதும் போதும் என்றாகிவிட்டது.

பள்ளிக்கூடத்தில் படிக்கும் பொழுதிலிருந்தே அண்ணா அவனுக்கு டைரி எழுதும் பழக்கத்தை ஏற்படுத்தினார். காலேஜூக்கு போனதும் நடுவில் சில நாள் அந்தப் பழக்கம் விட்டுப் போயிற்று. "நாள்தோறும் நீ டைரி எழுதுகிறாயோ, இல்லையோ?" என்று அவர் ஒரு தடவை அவனைக் கேட்டார். அதற்குப் பின்பு டைரி எழுத அவன் மறக்கவில்லை.

அவன் ஜூனியர் பி. ஏ யில் இருந்த போது அவர் சந்திபாத ஜூரத்தில் படுத்தார். இந்தச் செய்தி தெரிந்தவுடனே அவன் ஊருக்கு ஓடிவந்தான். ஒருநாள் அதிகாலையில் அவர் கண்திறந்து பார்த்தார். அவன் அவருக்குப் பிரதட்சண்யம் செய்து கொண்டிருந்தான். ஹூமாயூனுக்குத் தன் ஆயுசு கிடைப்பதற்காக அவனை வலம் வந்த பாபரின் ஞாபகம் அப்போது அவருக்கு வராமலில்லை.

கணேசன் பி. ஏ ஆகிவிட்ட தந்தி அண்ணாவின் கையில் அப்படியேதான் இருந்தது. ஆனால் அவர் மனம் கிர்ரென்று பழைய காலத்திலே சுற்றிவிட்டு வந்தது. தனக்குக் குழந்தை பிறந்த பிறகு, தன் சிறுவயதைக் கழித்த கிராமத்தில் தான் சுற்றி வரும் போது இளநங்கைக்கு ஒரு விதமான தனியின்பம் உண்டாகின்றதல்லவா? அண்ணாவின் ஆனந்தம் அந்தவகையைச் சார்ந்தது. கனவை விரும்பும் அவர் மனதுக்கு, வாழ்க்கையில் விதம் விதமான கனவுகளைக் காணும் சந்தர்ப்பமே கிடைக்கவில்லை. ஒரே ஒரு கனவைத்தான் அவர் அன்று இவ்வுலகிலே உண்மையாயிருந்தது. வாழ்க்கையில் ஏதாவதொன்றைச் சிறப்பாக செய்யவேண்டும் என்ற அவருடைய எண்ணம் அன்று நிறைவேறியிருந்தது. கையில் ஏதோ கொஞ்சம் பணம் இருந்துங்கூடச் சந்தர்ப்பங்கள் அவரை மேலே படிக்க விடவில்லை. ஏழை டிராயிங் உபாத்திரியாக இருந்தும், அன்று ஒரு தரித்திர ஹரிஜனப் பையனைப் பட்டதாரியாக்கிய திருப்தி அவருக்குக் கிடைத்திருந்தது. எதிர்ப்பு, வம்புப் பேச்சு, ஆலோசனை, கிண்டல் இவற்றில் ஏதாவதொன்றிற்கு அவர் பயந்திருந்தால்கூட, கணேசன் ஊரிலுள்ள மற்ற ஹரிஜனங்களைப் போல் கூலியாளாகியிருப்பான்; யார் சாவுக்காவது பறையடிக்க உட்கார்ந்திருப்பான். 'நான் அவனை ஓர் உலகத்திலிருந்து மற்றோர் உயர்ந்த பரந்த உலகத்தில் கொண்டு போய் விட்டேன். இனி அவனுக்கு நல்ல உத்தியோகம் கிடைக்கும். ஹரிஜனங்களின் முன்னேற்றத்திற்காக அவன் தன் உடல் பொருள் ஆவியை அர்ப்பணம் செய்வான். தம் இனத்தையே சேர்ந்த ஒரு பையன் ஒரு பெரிய பதவி வகிப்பதைக் கண்டு, ஊரிலுள்ள ஹரிஜனப் பையன்கள் எல்லோருக்கும் ஊக்கம் பிறக்கும்.' இப்படியாக அவர் மனம் மற்றொரு கனவு காண ஆரம்பித்தது.

தம் டிராயிங் ஆசிரியர் தொழிலைப் பற்றி அண்ணா எப்பொழுதுமே சந்தோஷப்பட்டதில்லை. அவரோடு பழகிய 'ஒன்றுமில்லாதவ'-னெல்லாம் 'பிரமாத மனுஷ'னாகியிருந்தான். அவருடைய ஒரு சிநேகித ஆசிரியரின் படங்கள் பிரதி மாதமும் ஒரு பிரசித்த மாதப் பத்திரிகையில் வெளிவந்தன. இன்னொருவருக்கு ஒரு ஸ்மஸ்தானத்தில் வேலை கிடைத்திருந்தது. ஆனால் அண்ணாவுக்கோ பள்ளிக்கூடத்தில் திருப்பித் திருப்பி அதே பூட்டு, சாவி, பூட்ஸூ, அதே கொல்லறு -இவற்றையே போட்டுப்போட்டு மனம் சலித்துவிட்டது. அதிகப் பழகத்தால் பிரியமான பொருட்களிட்கூட வெறுப்பு உண்டாகிறது. இந்த டிராயிங் ஆரியர் தொழிலோ துரதிஷ்டத்தால் அவர்மேல் விழுந்த தலைச்சுமை.

(அடுத்த இதழில் முடியும்)

**படித்து முடித்ததைப் பற்றி சிந்திக்காமல் தொடர்ந்து படித்துக்கொண்டே செல்வது, சீரணிக்கவிடாமல் சாப்பிட்டுக் கொண்டே செல்வதற்கு ஒப்பாகும்.**

- யாரோ -

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

# போராட்டம்

- பாலன் -

பதுங்கிப் பாய்ந்து புறப்பட்டு வரும் புலியிடம் புள்ளிமான் பசிக்கிறது புலியே பசும் புற்தரையைக் காட்டுவாயா என்று கேட்பதா? இல்லைப் பாய்ந்து ஓட வேண்டும், இல்லையேல் புலியின் பற்களுக்கு புள்ளிமான் இரையாகிவிடும்.

கூண்டில் இருக்கும் குருவிகூட தம் கூட்டத்தோடு குதூகலமாய் வாழத்தான் நினைக்கும்.
சுதந்திரம் என்பது வாய்மொழியோ? வாய்மொழி மறுத்திடல் இன்னுமோர் சுதந்திரம். சுதந்திர தாகம் ஒரு மனிதனின் உடலில் ஓடும் உதிரத்துடன் மட்டும் கலந்தது அல்ல. அவன் உணர்ச்சிகளிலும் கலக்கப்பட்டது. சுதந்திரம் சில்லறை கொடுத்து வாங்கும் சரக்கல்ல; வலையில் வீழ்ந்த வெண்புறா வலையறுக்க வலையுடன் போராடுவதே சுதந்திரப் போராட்டம்.
சுதந்திரம் என்றால் என்ன?
அது எதற்கு எதுவானாலும் இதுவே போதும் என்பவரும் உண்டு. விதைத்தவனுக்குத்தான் தெரியும் வயல் விளையவில்லையே என்கின்ற வேதனை. வரம்பில் நின்று வேடிக்கை பார்ப்பவனுக்குத் தெரியவே, தெரியாது.

எங்களின் முடிவனைத்தும் இன்னொருவனின். கைகயிலேயே உள்ளது. போராட்டம் வரவேற்கத் தக்கதும்; முக்கியமானதும் ஆனால் அது சரியான முறையில் நடைமுறைப்படுத்தப்பட வேண்டும். புரட்சி வீரன் தன் பெயரை சிம்மாசனத்தில் பொறிப்பதற்கென்றே புரட்சியில் ஈடுபடக் கூடாது. போராட்டத்தில் மக்களுக்கு நன்மையாக எது அமைந்தாலும் அவற்றை நடைமுறைக்கு கொண்டுவர வேண்டும்.
போட்டவுடன் முளைப்பதல்ல, இது போராட்டம், இதில் அழிவுகள் அதிகம், அதிகம். ஆனால் முடிவில் கட்டியெழுப்பப்பட வேண்டும்.
பிரச்சனை என்பதுவே பின் தொடரும்சிக்கல் தானே, அவை முடிவதில்லை. முடிந்தவர் முடிய இன்னொன்று தொடங்கிவிடும். அலை போல ஒன்று கரையை உதைத்துத்தள்ள ஒன்று நோக்கி வரும்.
எந்தவொரு நாட்டின் பிரச்சனையும் எழிதில் முடிவதில்லை. எதாவது ஒன்று எதிர்க்கட்சியின் கைக்குள் இருந்து பம்பரம்போலச் சுழன்று கொண்டிருக்கும். போராட்டமும் அப்படியே, அதைவிட ஒரு தனிப்பட்ட மனிதனின் வாழ்க்கையே ஒரு போராட்டம்தானே. கரையேறும் வரை ஓடம் அலையுடன் போராடியே தீரவேண்டும். பிறந்தால் இறக்கும்வரை வாழ்க்கையில் போராடியே தீரவேண்டும்.

போராட்டத்தில் பல பிழைகள் நடந்திருக்கின்றன; நடக்கின்றன; நடக்கப் போகின்றன. அவை தவிர்க்க முடியாத காரணமாகவும் இருந்திருக்கின்றன. தவிர்க்கக் கூடியதாகவும் இருந்திருக்கின்றன. இவற்றை வெளியில் இருப்பவர்கள் தான் திருத்த முட்படவேண்டும். மனித வாழ்வுக்காகத்தான் போராட்டமே ஆரம்பிக்கப்பட்டது.
மனித உயிரைக் கொல்ல மனிதனுக்கு உரிமை கிடையாது. அந்த உயிரைக் காக்க அந்த உரிமையைப் பெறலாம்.
மனிதநேயம் என்பது உண்மை. சிறந்ததும் 'முக்கியமானதும்' அதன்படி மரணதண்டனை விதிப்பது தப்பு; உண்மை ஆனால் ஒன்று மரண தண்டனை விதிக்கப்பட்ட கைதியால் பல மரணங்கள் நிகழுமானால் 'அவனுக்கு மரணத்தை நிச்சயிப்பதே சிறந்தது. ஓர் உயிருக்காக ஓராயிரம் உயிரைப் பலி கொடுப்பதா? மனிதநேயம் அற்ற மனிதன் மனித உடலைச் சுமந்து செல்லும் ஓர் இயற்கையின் படைப்பே நிச்சயமாக.
ஒன்றுமட்டும் பாவி மக்களைப் படுகொலை புரிய வரும் பட்டாளத்துடன் பாதுகாவலன் மனிதநேயம் கொல்லாதே கொஞ்சி விளையாடு என்று கூறமுடியாது. ஏன் இராணுவத்திற்கு மனிதம் என்றால் என்னவென்றே தெரியாது எதிர்த்துப் போரிட வேண்டும். இல்லை மக்களுயிர்?

எதிர்த்துப் போராடியே தீரவேண்டும்! அது அவன் கடமை அங்கே கடமைதான் நிற்கிறதே ஒழிய மனிதம் அல்ல. மனிதத்தைக் காக்கக் கடமை அதுதான் அங்கு செயற்படுகின்றது! அந்த இடத்தில் அவனிடம் மனிதத்தை எதிர்


தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



* திருமண வைபவங்கள்
* பிறந்த தின விழாக்கள்
* பொது நிகழ்ச்சிகள்
* வீடியோ திரைப் படங்கள்



எவையாயினும் கலைவண்ணத்துடன் ஒளிப்பதிவு செய்திட
பிரான்ஸில் என்றும் உங்கள் நினைவுகளில்,

# K.K.S TELE MOVIE





பாரீஸில் தயாரிக்கப்பட்ட திரைக்காவியமான
'விடுதலைப் பாதையில்...' மூலம்
திரைப்பட ஒளிப்பதிவாளர்களாகவும்
அறிமுகமாகிப் புகழ் பெற்றவர்கள்
கே. கே. எஸ் ரெலி மூவி ஸ்தாபனத்தினர்

K. K. S TELE MOVIE
25, Rue BISSON, 75020 PARIS.
தொடர்புகட்கு: 43 58 15 59 / 47 91 43 15

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

பார்ப்பது முட்டாள்தனம். போராட்டத்தில் நிற்கும் போர் வீரனுக்கு மனிதத்தன்மை இருக்கக் கூடாது! அது அடகு வைக்கப்படுகின்றது. முடிந்தபின்தான் எடுக்கலாம். அங்கே கடமைதான் வந்து குடிகொள்கின்றது.

இரத்தத்தினால் புஸ்பம் மலருமா?
மலர்ந்தவை அதிகம் அதிகம் உலக ஏட்டை எடுத்துப் பாருங்கள். அரக்கனிடம் இரக்கம் இருக்காது. இங்கே இரத்தம் செயற்படுகின்றது. மனிதனிடம் போய் அகிம்சையைப் பற்றிக் கூறுங்கள். மனிதநேயத்தைப் பற்றிக் கூறுங்கள்.

வெற்றி தோல்வி
இவை பந்தயத்தின் முடிவிலேயே ஒழிய இடையிலே இல்லை. இதுவரை போராடி என்ன கண்டீர்கள் போக்கினீர் பாவி மக்கள் உயிர்.

நண்பரே இது ஒன்றும் அதிஸ்ட இலாபச்சீட்டு அல்ல. சுரண்ட வந்து விழ! சுதந்திரம் ஆழத்தில் இருந்து வெட்டியெடுக்கப்படும் புதையல், தோண்ட வேண்டும். கூலி கொடுக்க வேண்டும், எறிய வேண்டும் மண். புரிந்தால் போராட்டம் இதுவே. இப்போதுதான் பயணம் ஆரம்பம். இடைக் கட்டம் இந்தச் சமயத்தில் ஓடி என்ன கண்டீர் என்று கேட்பதும் முறையல்ல. முடிவு அது இன்னும் வரவில்லை.

தமிழ் ஈழம்? உண்மை இருக்கின்றது எடுப்பது? எப்போ இன்றைக்கோ. இல்லை நாளைக்கோ இல்லை இன்னும் 20 வருடங்களுக்குப் பின்னோ. ஆனால் உண்மை தமிழீழம். தமிழீழம் இன்றி ஓர் தமிழனும் இனித் தீவில் வசிக்க முடியாது. அந்த அளவிற்கு அரசியல் தலைவர்கள் விதைத்துவிட்டனர் விதைகளை மக்கள் மத்தியில்!

அவனைப் பொறுத்த மட்டில் தீவு தனித்தீவு தமிழன் இன்றி தனக்கென ஓர் தீவு அதுவே இலங்கை. இந்தக் கூட்டில் குயிலுக்கு இனி இடமில்லை காகம் கொத்தத் தொடங்கி விட்டது. குயிலுக்குக் கூடு சொந்தமில்லாமல் இருக்கலாம். ஈழம் நமக்கு அது சொந்தம். தமிழீழம் எமக்கு வேண்டும், அதை எடுப்பது என்றால் அகிம்சையாலோ இல்லை அரசியல் ரீதியாகவோ எடுக்க முடியாது. ஆயுதம்தான் அதற்கு இப்போது சரியான தீர்வு.

ஆயுதம் என்று ஒன்றை எடுத்தால் அதற்குப் பின்னால் அழிவுகளை எதிர் நோக்கியே தீரவேண்டும்.

-தொடரும்-

# விடுதலைப் பாதையில்....

## திரைப்பட விமர்சனம்

இலங்கை இந்திய நாடுகளிற்கு வெளியே ஈழத்துத் தமிழ்க் கலைஞர்களின் ஒன்றிணைந்த பணியில் வெளியாகி ரசிகர்களின் பேராதரவினை பெற்றுக் கொண்ட திரைப்படம் என்ற பெருமையினை விடுதலைப் பாதையில் பெற்றிருக்கின்றது. ஏற்கனவே தனிப்புறா, நீதியின் சோதன ஆகிய வீடியோ திரைப்படங்கள் பிரான்சில் தயாரிக்கப்பட்டு இருந்தும் விடுதலைப் பாதையில் சிறந்த தொழில் நுட்பம், வெளிப்புறக் காட்சிகளின் சிறப்பு, சிறந்த இசையமைப்பு ஆகியவற்றால் வெற்றிப்படமாக அமைகின்றது.
அசோக்குமார், பாலுமகேந்திரா, சிறீராம் ஆகியோர் வரிசையில் கருணாநிதியும், ஜெயதாசனும் புறப்பட்டுள்ளனர். திரைக்கதை சரிவர அமைக்கப்படாததால் திறமையான நடிகர்கள் வீணடிக்கப்பட்டுள்ளார்கள். வசனம் பல இடங்களில் புராதன காலத் திரைப்படங்களை நினைவு படுத்துகின்றன.
குணபாலன் ரசிகர்களை வயிறு குலுங்க சிரிக்க வைக்கின்றார். சன்முகநாதன், நீலாட்சி, சண்மாஸ்டர், ரமேஷ் ஆகியோர் தமது பங்குகளை திறம்பட செய்திருக்கின்றனர். கணேஷ், சிறிதரன் இருவரும் இராணுவ வீரர்களாகவே மாறிவிட்டனர். பாரதியார் பற்றிய கற்பனை தேவையில்லாத ஒன்று எனினும் ஈழத்துக் கலைஞர்களுக்கு கௌரவத்தையும் புகழையும் தேடித்தந்திருக்கும் இயக்குனர் திரு. ஞானம்பீரிஸ் அவர்களின் கலைப்பணி தொடர வாழ்த்தி வரவேற்பதுடன் அவரது தன்னம்பிக்கை, முயற்சி என்பன அவரது G. P பிலிம்ஸ் நிறுவனத்திலிருந்து இன்னும் பல சிறந்த திரைப்படங்கள் வெளிவரும் என்பதனை உணர்த்தியுள்ளது. இசையமைத்துள்ள பஞ் அவர்களுக்கும் எமது பாராட்டுக்கள்.

-வெனோ-


தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

# என் அன்புச் சின்னம்

- பாலன் -

"மலையில் இருந்து ஓடிய நதி அல்ல
என் மனதில் இருந்து ஓடிய நதி"

* இரக்கம் என்பதன் பொருள் புரியாதவர்களைத் தானே 'அரக்கன்' என்கிறோம். கடமை என்னும் வீதியில் இரக்கம் தன் வாகனத்தைச் செலுத்த மறுக்கிறது.
* போராட்டத்திற்குத் தன் பெயரைப் பொறிக்க முடியாது என்றவர் எல்லாம் கொள்கைக்கும் கீழிறங்கி குருடன் கையில் கோல் போல் அரசியலில் இறங்கினர்.
* அரசியல் அர்த்தம் புரியாதவர் எல்லாம் அப்பாதையில் பயணம் செல்ல முடியுமா? நாட்கள் நகர நகர நடைமுறை மாற மாற அதற்கும் கீழிறங்கினர்.
* கொண்ட கொள்ளையைத் துறந்தவனெல்லாம்கொண்டு வழி நடத்தும் "தலைவன்" ஆகமுடியுமா? ஆயுதமென்றால் அது அழிவுகளைக் குறிப்பதே. அனைவருக்கும்தான் அழிக்கவேண்டுமென்றே அதைத் தூக்கிவிடாதீர்கள். அழிவுகளை அளந்தெடுக்க ஆயுதங்களால் முடியவே முடியாது.
* எதிரிக்கு முன்னால் ஆயுதத்தின் தரத்தை உயர்த்துங்கள். அண்ணன், தம்பி, தங்கை, அப்பா, அம்மா அவர்களுக்கு அவசரப்பட்டு விடாதீர்கள், அங்குதான் உங்கள் அங்கீகரிப்பு தாழ்ந்து விடும்.
* துப்பக்கிகளுக்குச் சொல்லி வைக்கமுடியுமா? தம்பி தப்பிப்பாய் சீறிப்பாயேதேயென்று. தட்டிக் கேட்பவன் தலைகளைத் துழைக்கவேயென்று தூக்கினார்களேயானால் உங்கள் பலவீனத்தைப் புரிந்து கொள்ள முடியாது.
* நான் ஒரு தமிழ் மகன். போராட்டம் எனக்கே. சுதந்திரத் தடாகத்தில் தலை முழுகப் போனவன் நானே. தாமரைப் பூக்களைப் பறிக்கப் போனவன் நானே. தங்க மீன்களை வலைபோட்டுப் பிடிக்கப் போனவன் நானே. பின் ஏன் எனக்கிந்த தங்கத் தடாகத்தின் மீது தணியாத கோபம். நண்பரே உயரத்தில் நின்று குனிந்து பார்க்க ஆசைப்படுகிறாயா? இல்லை அடிவாரத்தில் நின்று சிகரத்தை நிமிர்ந்து பார்க்க ஆசைப்படுகிறாயா?
* முன்னேற்றத்திற்கு முன்னால் முட்டும் கட்டைகள் இருக்கலாமண்ணே. அவற்றைத் தாண்டலாம். முன்னேற்றத்திற்கு முன்னால் முள்வேலி முகில் முகட்டைத் தொட்டுக் கொண்டிருக்கின்றன. வெட்டவேண்டாமா, அண்ணே!
* உண்மை உரிமைகள் பறிக்கப் படும் போது உறங்கிக் கிடப்பது உனக்கே நல்லதா? கண்கள் இன்றி வாழ்வது வாழ்வாகும். சுதந்திரம் இன்றி வாழ்வது வாழ்வாகுமா?
* மக்களுக்காகவே நாம் மண்ணை நேசிக்கின்றோம், மக்கள் இல்லாத மண்ணை நாம் நேசிக்கவில்லை. வார்த்தையின் அளவு உள்ளவரையில் செயற்பாடுகள் அன்றும் இன்றும் இல்லையே.
* மந்திரி என்பவன் மக்களைக் காக்க மக்களை வழி நடத்திச் செல்ல மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்டவன் எவனோ அவனே மந்திரி. அப்படிப் பட்டவனே மக்களை மாய்க்கப் புறப்பட்டால் மக்கள் நிலை?...
* மக்களின் நல்லெண்ணங்களுக்கு ஒப்ப வகையிலே தான் சட்டதிட்டங்களேயொழிய அவற்றைத் தெரிவு செய்பவனுக்கு ஒத்தவகையில் மக்கள் அல்ல.
* மக்களை மந்தையில் மேயும் மாடுகள் என்றெண்ணி அடித்து மேய்க்கப் பண்ணிய எந்தச் சர்வாதிகாரியும் அந்த நாட்டில் நிலையாக ஆட்சியில் அமர்ந்ததில்லை.
* மக்களைக் காக்கவே மந்திரியேயொழிய மந்திரிக்காக மக்களென்று அல்ல. மந்திரி மக்களுக்குச் செய்யும் சேவைக்கு மக்கள் தம் வரி மூலம் அவருக்கு ஊதியத்தைக் கொடுக்கின்றனர்.
* ஒரு நாட்டை வளர்ப்பதும் தேய்ப்பதும் அந்தச் சமயத்தில் ஆட்சியிலிருக்கும் மந்திரியின் கைகளிலேயே உள்ளது. அவனை நம்பியே மக்கள் தம் நிலைகளை முறையிடுகின்றனர், மனுக்கொடுக்கின்றனர்.
* ஆளும் ஆசையிலும் அதனால் வரும் வருமானத்தை எடுப்பதற்கெனவே வந்தமரும் எந்தவொரு மந்திரியாலும் அந்த நாட்டைப் பேணிக் காக்க முடியாது. .

விடயத்தைப் புரிந்து கொள்ளாமல் விளக்கவும் எவரும் முன்வரவில்லை, உண்மை அந்த நிகழ்ச்சி என்று எவருக்கு எப்படித் தெரியும். தொலைபேசிகள் பல வந்தன. அவையும் அக் காவேயால் பறிக்கப்பட்டன. காரணம் புரியாமல் தவித்தேன். முதலில் கூறினார்கள் சித்தம்மா என்றார்கள், அந்நேரம் என் சிந்தனைகள் சுழன்று சூறாவளிக் காற்றுப் போல் சுற்றியது. விபரமாகக் கூறுங்கள் நடந்தது என்னவென்றேன். ஒன்றும் இல்லை என்றனர். விளங்கிக்

www.tamilarangam.net

கொள்ளாத் தன்மையால் வரும் விளைவே மனிதனைப் பள்ளத்தில் தள்ளுவது. உண்மையைக் கூற மறுத்தனர். உண்மை தானா? என்னிடம் கூற மறுத்தனர். எனக்கும் தெரியவில்லை.

மனிதனின் முதல் அறியாமை அவன் தன் தாயின் கர்ப்பப் பையில் இருந்து வெளிவரும் போது உலகை எட்டிப் பார்க்கிறானே "அதுவே தான்" அறிவு எதுவும் எட்டிக் கொள்ளாத போது ஊட்டியவளையே அம்மா என்கிறது. அது அதன் அறிவுத் தேடலா? அப்படியே அது அவளை அழைக்கும் பொழுதும் அவள் அதை அணைக்கும் பொழுதும் அது அவள் மீது அன்பை ஊற்றுகிறதே. அது அதன் அறிவின் தேடலா? இல்லை ஆசையில் வந்த விளைவா?

சிரசைச் சாய்த்துப் பஞ்சு மெத்தையில் படுத்தேன். உழுத நிலத்தில் பெய்த மழையால் வந்த ஈரம் போல் என் கண்ணில் இருந்து கண்ணீர் ஓடிப் பஞ்சு மெத்தையை நனைத்தது. விடியும் தானே என்று ஏங்கினேன். அதுவும் இங்கு பத்து மணிக்குத் தானே. அப்பொழுது மனம் வாழ்க்கையை வெறுத்து ஒதுக்கியது. உணர்ச்சிகளைக் கட்டுப் படுத்தத்தான் மனிதனால் முடிந்ததே தவிர தடுத்துவிட முடியவில்லை. வாழ்க்கை மரத்தில் கனிகளைத்தான் புசித்துச் சென்றனரே. கொண்டு சென்றவர் யாரும் இல்லையே.

உன்னை உலகிற்குப் படைத்தவர்கள் உன் அன்னையும் பிதாவுமே. அவர்களே உன்னைப் பேணிவளர்த்து உன்னை ஒரு நிலையில் வைத்தனர். உனக்கு அவர்களைவிடச் சிறந்தோர் இவ்வுலகில் எங்கேனும் உண்டோ. இந்த உலகின் சுகங்கள் அனைத்தும் அவளின் மடிக்குக் கீழே தான். ஒருமுறை தலையைச் சாய்த்துப் பார்த்தால் சொர்க்கமே அங்குதான் ஆரம்பமாகின்றது. இதை மதவாதிகளும் மறந்துவிடுகின்றனர்.

தன் பெயரை எண்ணிக் கொள்கின்ற எவனும் தன் தாய் தந்தையரை மறக்கான். நீ மது போதையில் மூழ்கியிருந்தாலும், மாதுவிடம் மயங்கியிருந்தாலும், மண்ணில் வீழ்ந்து இருந்தாலும் தன் மனதுக்குள் அழுபவள் தாய்தான். தன் உடலின் ஒரு பகுதி கெடுதலான பாதையில் செல்கிறதே என்று எண்ணுபவளும் அவளே தான். அப்படிப் பட்டவளை எப்படிப் பட்ட நிலையிலும் நீ துன்புறுத்தி விடாதே? தாரத்தை மறுமுறை தாலிகட்டிப் பெறலாம். தாயை அப்படிப் பெற்றுவிட முடியுமா? தாயின் அன்பு உனக்கு ஒரே ஒருமுறைதான் கிடைக்கும். உன்னை இவ்வுலகுப் படைத்தவள் தாய். அவள் உன்னைப் பெற்றெடுக்கும் பொழுதே பாவத்தின் நிமித்தம்தான் பெற்றாள் என்றால் அவள் அவ்வளவு கொடியவளா? இருக்கும் பொழுது உனக்குப் புரியாது. இல்லாத பொழுது புரியும் அவள் இல்லையே என்கிற வேதனை.

"அகர முதல எழுத்தெல்லாம்
ஆதிபகவன் முதற்கேயுலகு"

என்றான் வள்ளுவன். உன்பிறப்புக்கு முதன்மையானவர்கள் உன் தாய் தந்தையே. உலகில் உள்ளவையனைத்தும் கேள்வியில் எழுந்தவை தான். ஆனால் விடையில் தான் நீ பிறக்கிறாய். மனிதன் இறப்பதில்லை. அவன் அன்றும் இன்றும் வாழ்ந்துகொண்டிருக்கிறான். இனியும் வாழ்வான். இறப்புக்கும் பிறப்புக்கும் இடையிலே தான் ஆரம்பமாகும் வாழ்க்கை, அர்த்தம் உள்ளதே ஆனால் அதைப் புரிந்துகொள்ளத்தான் பலரால் முடியாமலுள்ளது. பிறக்கும் பொழுது உள்ள மகிழ்ச்சி இறக்கும் பொழுது எவருக்கும் இருப்பதில்லை. செத்தால் உனக்குச் 'சொர்க்கத்தை' தருவேன் என்று எவன் சொன்னாலும் அவன் மனம் சஞ்சலப்படும். காரணம் இந்த உலகைவிட்டுப் பிரியப் போகிறோமே என்ற எண்ணமும், இந்த உலகில் ஐஸ்வரியங்களை அனுபவிக்க முடியாதே என்னும் வேதனையுந் தான் மனிதனை இறக்கும் பொழுது துன்புறுத்துகிறது.

இறக்கும் பொழுது தாய் என்ன நினைப்பாள். இவர்கள் முன்னேற்றத்தை என்னால் பார்க்க முடியாதா? என்று ஏங்குவாள் இறைவனிடம் வரம் வேண்டுவாள். தன் பிள்ளையை வருத்தி விடாதே என்று. பிறக்கும் பொழுது உன்னைப் பராமரிக்கிறாள் தாய். இறக்கும் பொழுது நீ கஸ்டப்பட்டு விடக்கூடாதே என்று கலங்குவாள் தாய். எப்படி வேண்டுமானாலும் நீ வாழலாம். ஆனால் நீ பிறந்து எப்படி எப்படி வாழ்ந்து வளர்ந்து வர வேண்டும் என்று நீ கர்ப்பப் பையில் இருக்கும் பொழுதே உன் தாய் மனதுக்குள் ஒரு கோட்டையைக் கட்டி விடுகிறாள். என்று நீ உன்னை அறிகிறாயோ அன்று தான் நீ உள் அன்னையை அறிவாய்.

பட்சிகள் குரல் இங்கு இல்லை. 'என்னை எழுப்ப' மின்சார ரெயில் எழுப்பியது. எழுந்து எட்டிப் பார்த்தேன். கதிரவன் கதிர்கள் கண்களைக் குத்தின. எழுந்து பார்த்தேன் கடிகாரத்தை நேரம் காலை 5 மணி. மறுபடியும் வெறுப்புடன் படுத்தேன். இரவுக்குத்தான் விடிவு வந்தது. ஆனால் அந்த விடயத்தில் இன்னும் விடிவு வரவில்லையே!

விபரத்தை அறிய மனங்கள் எவ்வளவு தூரம் இச்சைப்படுகிறது. விளங்காவிட்டால் மனம் காற்றடிக்க மரம் எப்படி அசைகிறதோ அப்படியே அசைகிறது. என் மனதுக்குள் ஒரு தூறாவளி புழுதியைக் கிழப்பி மேலே செலுத்திக்கொண்டுதான் இருந்ததே தவிர அதை இறக்கவில்லை. எத்தனையோ மைல்களுக்கப்பால் நான் இருந்தேன். ஆனால் சிந்தனை என்னை என் ஊருக்குக் கொண்டு சென்றுவிட்டது. உலகில் அதிவேகமாகச் செல்லும் விமானம் சிந்தனைகளே. அறியாத வயதில் கடற்கரை மணலில் அ. ஆ என்று கோலமிட்ட கைகள். கட்டியணைத்து முத்தம் கொடுப்பவள் அன்னை. பேய்.. பேய்.. பேய் என்று அலறும் பொழுது என்னைப் பயப்படாதே என்று கட்டியணைத்துக் கொண்டு படுப்பாள் என் அன்னை. இருக்கும் பொழுது உணரார் என்பது போன்று நானும்

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

உணரவில்லை அவளின் அன்பை. தையலில் தேர்ச்சி பெற்றவள் துணைவன் இறந்த பின்பு அதுவே அவளின் தொழில்.

மண்ணிலே பொன் எடுக்கும் தோட்டங்கள் பலவுண்டு. பார்ப்பதற்கு ஆள் இன்றி பாட்டனுடன் நானும் அதைப் பராமரிப்பேன். நானே அதைக் களவாகப் பறித்து விற்று பீடி குடிப்பது, கீரிமலை சென்றதுமுண்டு. நான்கு பிள்ளைகளுக்கு அவள் தாய். மூத்தவனும் இளையவனும் யாழ் இந்துக் கல்லூரி மாணவர்கள். இரண்டாவது பெண் தெல்லிப்பழை யூனியன் கல்லூரி மாணவி. மூன்றாவதுவே நான். ஊரில் உள்ளவர்கள் அனைவரையும் கேட்டால் என்னைக் குழப்படி, படிப்பில்லாதவன், அறிவு என்னை எட்டிக்கொள்ளவில்லை என்பார்கள். அறிவுரை கூறாதவர் அவ்வூரில் இல்லை எனக்கு. ஆனாலும் அவளுக்கு என்னில்தான் அக்கறை அதிகமாம் என்பார்கள் பலர்.

பிள்ளைகளின் மகிழ்ச்சியில் தானே பேற்றோர் மகிழ்கின்றனர். பிள்ளையின் சிறந்த நடத்தையும், அவனின் முன்னேற்றம் காணும் செயற்பாடுகளும் தானே பெற்றோர் இதயத்தைக் குளிரச் செய்வது. தாய் தன் பிள்ளையைத் திட்டுவாள், ஆனால் பிறர் திட்டும் பொழுது மட்டும் மனம் உடைந்து போவாள். தனக்கேதும் தீங்கு ஏற்பட்டால் அஞ்சாள். ஆனால் தன் படைப்பிற்கு ஏதும் தீங்கு ஏற்பட்டால் அவள் புலம்பல் சொல்லில் அடங்கா.

என் ஆட்டங்களைப் பொறுக்காமல் என் ஆசையுடன் கடன்பட்டு வெளிநாடு அனுப்பி வைத்தாள். அப்பொழுதான், இல்லை அதற்கு முதலிலேயே அந்நிய இராணுவம் அப்பாவி மக்களைச் சுட்டுக் கொன்றான். அவனுடன் துணைக்கு என் அண்ணனும் சென்றான். பாதை தவறி அவன் பள்ளத்துக்குள் சென்றாலும் என்ற நல்லெண்ணமா?

ஒடுக்குமுறைக்கு எதிராகவே ஏந்தப்பட்டது ஆயுதம். ஆனால் அதன் பின்பு "அரசியலும்" ஒரு ஆயுதம் ஆக்கப்பட்டது. அமைதி காக்க வரும் பொழுதே அவன் சீறிப்பாயும் துப்பாக்கியுடன்தான் வந்து இருக்கிறான் என்று யார்தான் எண்ணினார்கள்...

(மிகுதி அடுத்த இதழில்...)

6 வது சாதனை ஆண்டில்

பாரிஸ் தமிழர் கல்வி நிலையம்

முக்கிய குறிப்பு:

பாரிஸில் Rue de Charonne னிலும் Garges Sarcelles இலும் சிறுவர்களுக்கான தமிழ் வகுப்புக்கள் நடைபெறுகின்றன.

Garges Sarcelles தமிழ் வகுப்பு சம்பந்தமான தொடர்புகளுக்கு

தொலைபேசி எண்கள்:

39 93 47 19

39 86 73 55

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

உலகம் என்ற ஏட்டிலே
மனிதன் என்ற கோட்டிலே
வாழ்க்கை என்ற எழுத்துக்கள்
எப்போதும் இடைப்பட்ட இடத்திலேயே தான் எழுதப்படும்.
வருவதும் இல்லை, போவதும் இல்லை.
முன் ஜென்மமும் இல்லை, பின் ஜென்மமும் இல்லை.
ஏன் என்றால்?
ஒரு கோட்டின் முன் எழுத்துக்கள் தொடங்குவதுமில்லை
ஒரு கோட்டின் பின் எழுத்துக்கள் முடிவதும் இல்லை.

பாலன்

# விடியல்

கரையை கட்டி அணைக்கும் கடல், அந்த கரையையே எட்டி உதைக்கும் அலை, கரையை கட்டி அணைக்கும் கடலும், கரையை எட்டி உதைக்கும் அலையும் எப்படியோ அப்படியே வாழ்க்கையின் இன்பமும் துன்பமும். இன்பம் மனிதனை கட்டி அணைக்கிறது. துன்பம் மனிதனை எட்டி உதைக்கின்றது. கடல் இருக்கும் வரையும் கரையும் அதை எட்டி உதைக்கும் அலையும் இருந்தே தீரும்.

சொர்க்கம் என்ற தத்துவத்துக்கு பொருள்தேட மனிதன் மதப் புத்தகங்களையே புரட்டுகிறான். சொர்க்கம் என்பது மேலுள்ள ஒரு உலகம் அல்ல. சொர்க்கம் அது பூமியில் நம்மைச் சுற்றி உள்ளதே என்பது தான்: எந்த மனிதனும் கற்றுக் கொள்ளாத பாடம்.

சர்வ வல்லமை:-
சகலதையும், அனைத்திலும் வல்லவர், முதன்மையானவர், அவர்தான் சர்வேஸ்வரன். இது இன்றுசெய்வாய், இன்று நீ பிறப்பாய், பிறந்து நீ இதை இதையெல்லம் செய்வாய், நீ செய்யும் அனைத்துக் காரியங்களையும் நீ பிறப்பதற்கு முன்னமே அறிந்தவர். அவர் தான் கடவுள். சர்வ வல்லமை படைத்த தேவன்.

படித்துக்கொண்டே சென்றால் போதுமா? படித்ததை பரிசீலனை செய்யக்கூடாதா? அப்படியென்றால் உனக்கு ஓர் அறிவு இல்லையா? சிந்தனை இல்லையா? படித்ததை பரிசீலனை செய்யும் போதுதான் அதன் பலத்தையும், பல்வீனத்தையும் அறிவாய். பக்தன் என்று படித்து பித்தன் போல் பின்தொடர்வதால் தான் பிழைகள் உங்கள் கண்களுக்குப் புலப்படுவதில்லை. பிரச்சனைகளை பரிசீலனை செய்வதுதான் பகுத்தறிவு.

பரிசீலனை:-
தேவனாகிய கர்த்தர் மனிதனை நோக்கி நீ தோட்டத்தில் உள்ள சகல விருட்சத்தின் கனிகளையும் புசிக்கவே புசிக்கலாம். ஆனாலும் நன்மை, தீமை அறியத்தக்க விருட்சத்தின் கனியைப் புசிக்க வேண்டாம். அதை நீ புசிக்கும் நாளில் சாகவே சாவாய் என்று கட்டளை இட்டார். இது பைபிள் ஆதியாகமம் 2ல் 16,-17ல் எழுதப்பட்ட வசனங்கள்.

நன்மை, தீமை அறியத்தக்க கனியைப் புசிக்க வேண்மடாம். இப்படியே கடவுள் ஆதாமிற்கு கட்டளை இட்டார். இதுவரை கனியைப் புசிப்பதற்கு முன்பு நன்மை, தீமை என்றால் என்ன? என்பது எதுவுமே ஆதாமிற்கு தெரியாது. அதாவது கனியைப் புசித்தால் என்ன நன்மை உண்டாகும்? என்ன தீமை உண்டாகும்? பாம்பின் பற்களில் விசம் உண்டு என்பதை அறியாப் பாலகன் கையில் வைத்து அதை விளையாடுவானேன். அது போல புசிக்க வேண்டாம் என்று கூறினார். அதைப் புசிக்கும் நாளில் இருந்தே உன் கண்கள் திறக்கப்படும். நன்மை, தீமை எதுவென அறிவாய். நீ நிர்வாணமாய் இருப்பதை அறிவாய். அதைப் புசிக்கும் நாளில் இருந்தே நீ சாவாய். புசிப்பதற்கு முன் ஆதாமிற்கு இவை தெரியவே தெரியாது. ஆகவே அவர்கள் எதுவும் அறியாதவர்கள். சட்மன்றத்திற்கு இதைக் கொண்டுவந்தால் ஆதாம் பக்கமே நீதி செல்லும். அறியாமல் செய்யும் தவறுகள், தவறுகள் அல்ல. அவற்றிற்கு ஆண்டவனிடத்திலேயே மன்னிப்பு உண்டு. அறியாமை என்பது விளைச்சலும், விளைவும் அறியாததே ஆகும். ஆதாம் ஏவாள் அறியாமல் செய்த தப்புக்கு ஆண்டவனாகிய கர்த்தர் தண்டனை கொடுத்துவிட்டார்.

காரியத்தை மறைத்து விட்டார். மனிதனை மயானத்துக்கு அனுப்பி விட்டார். நீதி, அநீதி ஆகிவிட்டது. மேலும் சர்வத்தின் செயற்பாடு செயல் இழந்துவிட்டது. கடவுள் நம்மை படைத்திருப்பாரேயானால் வாழ்வதற்காகவேயொழிய தன்னை வழிபடுவதற்காக என்றிருக்காது. சர்வத்தையும் தன் செயலில் வைத்திருப்பவனுக்கு உணவு, உடை, இருப்பிடம் வழங்குதல், நன்றி செலுத்துதல் அதுவே அவனே அவனுக்கு அதை அனைத்தையும் செலுத்துவதுபோல் அல்லவா உள்ளது. ஏன் அவன் இன்றி அணுவும் அசையாது. ஆட்டம், பாட்டம் அனைத்தும் அவனே அவனின் செயல். தேவனாகிய கர்த்தர் உண்டாக்கிய சகல காட்டு விலங்குகளைக் காட்டிலும் சர்ப்பமானது தந்திரம் உள்ளதாய் இருந்தது. அது ஸ்திரீயை நோக்கி நீங்கள் தோட்டத்தில் உள்ள சகல விருட்சங்களின் கனியை புசிக்க வேண்டாம் என்று தேவன் சொன்னது உண்டா என்றது. ஸ்திரீ சர்ப்பத்தை பார்த்து நாங்கள் தோட்டத்தில் உள்ள விருட்சங்களின் கனியை புசிக்கலாம் ஆனால் தோட்டத்தின் நடுவில் உள்ள விருட்சத்தின் கனியை குறித்து தேவன்



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

நீங்கள் சாகாதபடிக்கு புசிக்கவும் அதைத் தொடவும் வேண்டாம் என்றார். அப்பொழுது சர்ப்பம் ஸ்திரீயை நோக்கி நீங்கள் சாகவே சாவதில்லை நீங்கள் இதைப் புசிக்கும் நாளிலே உங்கள் கண்கள் திறக்கப்படும், என்றும் நீங்கள் நன்மை தீமை அறிந்து தேவர்களைப் போல் இருப்பீர்கள் என்று தேவன் அறிவார் என்றது. அப்பொழுது ஸ்திரீ ஆனாவின் அந்த விருட்சம் புசிப்பதற்கு நல்லதும், பார்வைக்கும் இன்பமும், புத்தியைக் கொடுக்கும் என்று இச்சிக்கப்படத்தக்க விருட்சமாக இருக்கின்றது என்று பறித்து, புசித்து, தன் கணவனுக்கும் கொடுக்கிறாள். (பைபிள் ஆதி (3:1-7))

1. இப்பொழுது அவர்கள் கண்கள் திறக்கப்பட்டுவிட்டன.
2. அவர்கள் தாம் நிர்வாணமாய் நிற்பதை உணர்ந்து விட்டனர்.
3. இனிமேல் அவர்கள் நன்மை, தீமை என்ன என்பதை அறிந்து கொள்வர்.
4. இனிமேல் அவர்கள் சாகவே, சாவார்.

கடவுள் கர்த்தர் சர்வ வல்லமை படைத்தவர் வருகிறார். தோட்டத்தில் குளிர்ச்சியான வேளை தேவனாகிய கர்த்தரின் சத்தத்தைக் கேட்டு தாம் நிர்வாணமாய் நிற்பதால் எப்படி தேவன் முன் வருவது எனும் எண்ணத்தில் அவர்கள் கர்த்தருடைய சந்நிதிக்கு விலகி தோட்டத்தின் விருட்சங்களினுள் ஒழிந்து கொண்டனர். அப்பொழுது தேவன் ஆதாமை கூப்பிடுகிறார். நீ எங்கு இருக்கிறாய் என்று. அதுவரைக்கும் கடவுள் கர்த்தருக்கு அவர்கள் எங்கு இருக்கிறார்கள் என்று தெரியாது. அப்பொழுது அவன் நான் தேவனுடைய சத்தத்தைக் கேட்டு நான் நிர்வாணமாய் நிற்பதால் தேவன் முன் வரப் பயந்து விருட்சங்களில் ஒழிந்து கொண்டேன் என்றான். அப்பொழுது அவர் நீ நிர்வாணி என்று உனக்கு அறிவித்தவன் யார்? இதுவரைக்கும் சர்வவல்லமை பொருந்திய கர்த்தருக்கு அவர்கள் கனியை அருந்தியது தெரியாது. நான் உனக்கு விலக்கின விருட்சக் கனியை புசித்தாயோ? கவனிக்க வேண்டிய விடயம் புசித்தாயோ என்றார்.

1. இதுவரை ஏவாளுடன் சர்ப்பம் கதைத்தது தேவனுக்கு தெரியாது.
2. அவன் நீங்கள் கனியைப் புசிக்கலாம் நீங்கள் சாகவே சாவதில்லை என்று கூறியது தெரியாது.
3. அவர்கள் கனி பறித்தது புசித்தது தெரியவே தெரியாது அவருக்கு.
4. அவர்கள் கண்கள் திறக்கப்பட்டது, நிர்வாணமாய் நிற்பது, நன்மை, தீமை அறியத்தக்கவர்கள் என்பதுவும் தேவனுக்குத் தெரியாது.
5. அவர்கள் தோட்டத்தில் மறைந்து இருப்பதும் தெரியாது. இங்கு நடந்த எதுவுமே தேவனாகிய கர்த்தருக்குத் தெரியாது.

இங்குதான் அவரின் சர்வம் இழந்துவிட்டது.

1. எல்லாம் வல்ல இறைவனுக்கு இது எப்படி தெரியாமல் போனது.
2. சர்வ வல்லமை என்பது இன்று நீ செய்யப் போவதை என்றோ அறிந்தவர்தான் கடவுள்.
3. தேவனாகிய கர்த்தருக்கு இவை அனைத்தும் எப்படித் தெரியாமற் போனது. அப்படியாயின் அவர் கடவுள் இல்லையே.
4. சாத்தன் வந்து கதைத்தது தெரியாது; கண்கள் திறக்கப்பட்டது தெரியாது; தோட்டத்தில் அவர்கள் நிர்வாணமாய் நிற்பதும் தெரியாது. இவை எதையுமே அறியாத தேவனாகிய கர்த்தரை சர்வ வல்லமை படைத்த கடவுள் என்று கூறுவது எவ்விதத்தில் உண்மையாகும்!

சரி இவை அனைத்தும் சர்வ வல்லமை பொருந்திய கர்த்தருக்கு தெரியுமென்றே வைத்துக் கொள்வோம். ஏன் முன் தோன்றி இதைத் தடுத்திருக்கக் கூடாது. மனிதனைக் காக்க வேண்டும் அவன் கனியைப் புசித்தால் செத்துப் போவானே என்கிற கடமை உணர்வு இந்தக் கர்த்தர் கடவுளுக்கு இருந்திருக்குமேயானால் தடுத்தல்லவா இருக்க வேண்டும். இதைத் தெரிந்தும் அதை மேற்கொள்ளவில்லையானால் அவர் காக்கும் கடவுள் அல்ல. அரக்கத்தன்மை இவருடன் அதிகம். இரக்கம் என்பது இல்லவேயில்லை.

சீசரின் சிங்கங்கள் பிடித்து வந்த அடிமைகளின் உடல்களை கீறிக் கிழித்துண்ண சிம்மாசனத்தில் இருந்து சீசரும் அவர் தோழர்களும் கைகொட்டி சிரித்து மகிழ்வார்களாம். இவை என்ன பூனை எலியைத் துன்புறுத்துவது தேவனின் திருவிளையாடலா?

வேந்தருக்கு வேடிக்கை விளையாட்டு; வேதனை நமக்கு அல்லவா?

காக்கத் தெரியாதவரெல்லாம் கடவுளாவாரா?

இராவணனை அரக்கன் என்கிறோம். சூரனை அரக்கன் என்கிறோம். இரணியனை அரக்கன் என்கிறோம். ஏன் இலங்கை அரசையே அரக்கன் என்கிறோம். என்னதான் செய்தார்கள் இவர்கள். அனைத்திலும் அறிந்தவன் ஆட்டம் அப்படி என்றால் ஆறறிவு படைத்த மனிதனின் ஆட்டம் எப்படியிருக்கும் என்பதை எவருமே எண்ணியது கிடையாது?

(தொடரும்...)

www.tamilarangam.net

# வசந்தியை வாழவிடுங்கள்

ரமேஷ்



**வா**னம் பூமியின் மேல் விழுந்து விட்டதோ என எண்ணத் தோன்றும் அளவுக்கு எங்கும் வெண்ணிற ஐஸ் படிவங்கள். ஜன்னலினூடாக வெளியே எட்டிப் பார்த்துக் கொண்டிருந்த வசந்தியின் கண்களில் தூக்க முடியாத பாரத்துடன் சிரமப்பட்டுக் கொண்டு மாடிப்படிகளில் ஏறமுயற்சித்துக் கொண்டிருந்த மேடம் கரோலின் தென்பட்டார். விறுவிறு என கீழே இறங்கிச் சென்று அவளுக்கு உதவியாக பொருட்களை மேலே கொண்டு வந்து சேர்த்தாள். தனக்க உதவியதற்காக அவளுக்கு நன்றி சொன்ன கரோலின் பொதிகளை உடைத்து, கொண்டு வந்த பொருட்களை கூடத்தில் பரப்பினாள். எல்லாமே விளையாட்டுப் பொருட்களும் சிறு பிள்ளைகள் அணியும் சட்டைகளும்தான். ஆச்சரியத்துடன் அவரை நோக்கிய வசந்தியிடம் "என்ன பார்க்கிறாய் எல்லாம் உனக்குப் பிறக்கப் போகிற பாப்பாவுக்குத்தான்." என்ற போது அவளால் உணர்ச்சிகளைக் கட்டுப் படுத்த முடியவில்லை, ஓடிச் சென்று அவரை அணைத்துக் கொண்டாள்.

வசந்தி ஜேர்மனிக்கு வந்து இரண்டு வருடங்கள் ஆகின்றன. இந்த இரண்டு வருடங்களிலும் அவள் வாழ்க்கையில் எத்தனை மாற்றங்கள், ஏமாற்றங்கள், இழப்புக்கள்.

அறுபது வயதானாலும் இன்னும் சுறுசுறுப்போடும் வாழ்க்கையில் விருப்போடும் வாழ்ந்து கொண்டிருக்கும் மேடம் கரோலின் மட்டும் அவளைச் சந்திக்காமல் இருந்திருந்தால் வசந்தி இறந்து 2வது ஆண்டு நிறைவும் பூர்த்தியாகியிருக்கம்.

"ஆனந்தன்", அவன் அவள் வாழ்க்கையில் குறுக்கிடாமல் இருந்திருந்தால் இன்னும் அவள் அளவெட்டியின் செம்மண் படிந்த நிலத்தில் பெற்றோரின் அரவணைப்பில் வாழ்ந்து கொண்டிருப்பாள் அல்லது தன்மண்ணுக்காக போர்க்கொடி உயர்த்தி அவளும் போராடப் புறப்பட்டிருப்பாள். அவள் தன் எண்ணங்களைப் பின்நோக்கி ஓடவிட்டாள்.

பரம்பரைத் தோட்டக்காரனான கந்தசாமியின் 3வது வாரிசு அவள். காண்போரை மயங்க வைக்கும் பேரழகி இல்லை என்றாலும் அவள் அழகிதான். அழகைவிட அவளது சுறுசுறுப்பும் பேச்சும்தான் ஆனந்தனை மயங்க வைத்தது என்றால் அதுதான் உண்மை.

மகாஜனாக் கல்லூரியில் க.-பொ.த சாதாரண தரத்தில் அவள் படித்துக் கொண்டிருக்கும் போது உயர்தரம் விஞ்ஞானப் பிரிவில் அவன் கற்றுக் கொண்டிருந்தான். பாடசாலை ஆண்டு விளையாட்டுப் போட்டியில் இருவரும் ஒரு இல்லமாக தேர்ந்தெடுக்கப்பட்டு விளையாட்டுப் போட்டிக்கான ஆயத்தங்களை செய்து கொண்டிருக்கும் பொழுதுதான் அவளின் உற்சாகமான பேச்சுக்களும் எந்நேரமும் மகிழ்ச்சியுடன் வளையவரும் முகமும் ஆனந்தனை காதல் கொள்ள வைத்தது. போட்டி முடிவுநாளன்றே அவளிடம் தனது கடிதத்தை கொடுத்து விட்டான் ஆனந்தன்.

அதில்

அன்புள்ள வசந்தி

உன்னை நான் சந்தித்தது என் அதிஸ்டம் என்றே நினைக்கிறேன். வாழ்க்கைப் பயணத்தில் உன்னோடு இணைந்து வரத் துடிக்கிறேன். சம்மதிப்பாய் என நினைக்கின்றேன். என் எண்ணங்களுக்கு இசைந்து வருவதாயின் உன் வீட்டு முற்றத்தில் பூத்திருக்கும் ரோஜா மலர் நாளை நீ பாடசாலைக்கு வரும்போது உன் தலையில் பூத்திருக்க வேண்டும். வாசலில் உனக்காக நான் காத்திருப்பேன்.

என்றும் அன்புடன்
ஆனந்தன்

வசந்தியால் அன்றிரவு முழுவதும் தூங்கவே முடியவில்லை. ஆனந்தன் எப்படிப்பட்டவர்? அவருடன் இணைந்து போவாமா? ஏமாற்றி விடுவாரா?

காலையில் வழமைபோல் பாடசாலைக்குப் போவதற்காக ஆயத்தமாகிக் கொண்டு வாசலுக்கு வந்தவளின் கண்களில் வீட்டு முற்றத்தில் பூத்துக் குலுங்கிய ரோஜா மலர்கள்



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

தென்பட்டன. அவளை அறி யாமலே அவள் கை ரோஜா மலரோன்றைப் பறித்து தலை யில் சூடிக் கொண்டது.

"எடியேய் ஏனடி பூவைப் பிடுங் கிறாய்" குசினிக்குள் இருந்து அக்கா கத்துவது கேட்டது. அக்காவுக்குத் தெரியுமா சிவப்பு ரோஜாவுக்கும் அவளுக்கு முள்ள தொடர்புகளைப் பற்றி.

கடிதத்தில் குறிப்பிட்டது போலவே ஆனந்தன் வாசலில் காத்திருந்தவன் வசந்தியைக் கண்டதும் இமயமலையையே புரட்டி விட்டவன்போல் மகிழ்ச் சியுடன் தன் வகுப்புக்குள் ஓடினான்.

காலங்களும் நகர்ந்தன, காத லும் வளர்ந்தது.

அன்றைக்கு ஆனந்தன் வழ மையாக சந்திக்கும் இடத்துக்கு நேரஞ் செல்லவே வந்திருந் தான் கண்கள் கலங்கியிருந் தன, "ஆனந்தன் ஏன் அழு றீங்க, என்ன நடந்தது" வசந் தியின் கேள்விக்கு உடனே பதில் சொல்லாது அருகில் இருந்த மதிற்சுவரில் ஏறி இருந் தான்.

(அடுத்த இதழில் முடியும்)


உங்கள் மளிகைத் தேவைகளுக்கு....

"குமார் மளிகை ஸ்தாபனம்"

"KUMAR ALIMENTATION"

Tel: 48 09 89 25

13 Rue de Zobary
93200, St Denis.
France.

www.tamilarangam.net



# பூந்தளிர்கள்

## Lise la maladroite

Il était une fois, une jeune fille qui s'appelée Lise. Elle était maladroite, mais gentille. Elle habitait chez sa tante Janine. Un jour sa tante est partie achetée les provisions parce que Mme Lavi la femme du maire devait venir rendre visite. Et Mme Janine avait dit à Lise de bien nettoyer par terre avec de l'eau de javel. Mais Lise a entendu avec de l'huile, Mme Janine avait dit aussi de mettre le poulet dans le four à 40° et le bébé dans le berceau. Alors Lise l'obeit, elle nétoit par terre avec de l'huile, elle met le bébé dans le four et le poulet dans le berceau. Dés que Mme Lavi frappe à la porte. Lise ouvre la porte, Mme Lavi rentre, et tombe sur Lise. Mme Janine arrive, elle voit la porte ouverte et voit Lise par terre, assise sur le dos de Mme Lavi. Mme Janine dit "léve toi Lise!" et Mme Janine tombe sur Lise, tout de suit, elle se léve, et dit à Lise de se lever, et Lise n'a pas voulut. Tout cela est arrivée à cause du masque blanc pour préserver le visage, parce que Lise croiyait que s'était une voleuse. Lise dit en riant "regarde ma tante j'ai attrapée une voleuse" "mais non ce n'est pas une voleuse c'est Mme Lavi" répond Mme Janine. Tout de suit Lise se léve et s'excuse au prés de Mme Lavi. Et tout s'est arrangé sauf pour Mme Lavi, parce qu'elle avait mal au dos. Mme Janine demande à Lise "Ou est la bébé" Lise dit "elle est dans le four ma tante". Mme Janine court vers le four, et ouvre le four. "OUF" répond Mme Janine en sautant. Savez-vous pour quoi? C'est parce que Lise avait oubliée de metre le four en marche. Et Lise prend le poulet et met dans le four et la fait cuir. La famille c'etait bien régalées. Lise demande "pardon" à sa tante.

Mahendrarajah Dhushjanthy
4 Place des Vergers
95140 Garges les Gonnesse.

## La Justice



La Justice est le plus souvant représentée sous les traits d'un femme tenont enéquilibre une bazlance. Les deux plateaux de cette balance symbolise la Rigueur et la Miséri corde, qui à parts égales, doivent guider son action. Parfois, ces deux principes sembles dificiles à conciler, dans certains crimes sont odieux. Mais pour faire toute la lumiére sur les affaires qui lui sont soumises, et enfin pour se prononcer le plus équitablement possible sur la responsabilitée des accusés et décider des actions qui leurs seront appliquées.

Shangeetha shanmugathasan
6, Rue des Louvres
Garges les Gonnesses



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

# ஆலமரமும் நாணலும்



ஓர் ஊரின் எல்லைப்புறத்தில் ஒரு ஆலமரம் மிகவும் பசுமையாக பரந்து விரிந்து நிற்கின்றது. அதன் பக்கத்தில் சிறிய நாணல் புல்லும் வளர்ந்திருந்தது. ஆலமரம் நாணல் புல்லிடம் தான் பல ஆண்டுகளாக காற்று, மழை, வெய்யில் என்பவற்றிற்கு அசையாத தன்னுடைய கிளைகளை நாற்றிசைகளும் பரப்பி வாழ்வதாகச் சொல்லும். அதுமாத்திரமன்றி பல பறவைகளுக்கும், விலங்குகளுக்கும் உணவும், உறைவிடமும் கொடுப்பதாகச் சொல்லிப் பெருமைப்பட்டுக் கொள்ளும். "சிறிய புல்லாகிய உனக்கும் நான்தானே பாதுகாப்பு தருகின்றேன்." என்று சொல்லி கர்வமாக நிமிர்ந்து நின்றது.

திடீரென்று ஒரு நாள் மாலை பலத்த இடியுடன் கூடிய மழை பெய்தது. அத்துடன் காற்றும் பலமாக வீசியது. சூறாவளிக் காற்றும், மழையும் இரண்டு நாட்கள் தொடர்ந்தது. அதனால் ஆலமரத்தை சுற்றிப் பெருவெள்ளம். நாணற்புல்லும் அந்தப் பெருவெள்ளத்தில் முற்றாக மூழ்கிவிட்டது. இரண்டு நாட்களின் பின்பு காற்றும் மழையும் நின்று, வெள்ளஞ் சிறிது குறைந்திருந்தது. நாணற் புல்லும் மெதுவாக தலையை நிமிர்த்தி சுற்றும் முற்றும் பார்த்தது. தனக்குப் பாதுகாப்புத் தருவதாகப் பெருமையாக பல காலஞ் சொல்லி நிமிர்ந்து நின்ற ஆலமரம் வேரோடு நிலத்தில் வீழ்ந்திருந்ததைக் கண்டு நாணற்புல் தனக்குள் சிரித்துக் கொண்டது.

- ம. தாட்சாயணி-

---

# Le Chat



Depuis fort longtemps le chat était sacré en Egypte; il était considéré comme un dieu. Avec ses poils qui se herissent quand on le caresse, les yeux qui brillent la nuit ou dans le noir et son museau moustachu. Il est adorable, je rêve du chat presque tous les jours et un jour d'automne, je reçus un chat. Il n'aime pas beaucoup le, lait, mais il adore les poissons surtout du saumon. Il miaule toute la nuit. Il vient se gratter le dos a mes pieds, il chasse les papillons et joue au footballe avec une petite balle, il saute quand il voit un fil. Il sort ses griffes pour s'agripper sur des dras ou des habits. Les chats ne doivent pas être manger par l'homme!

Peratheepan.

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



## Le Rêve

Si j'était un serpend
Je volerai le vent
Le ventre bien rond
Les couleurs changeeant
Qui donne des fissons.
Je pleure en criant
Si j'était un serpend.

LEEYONI RAJARATNAM
13, RUE DES PEUPLIERS,
95140 GARGES LES GONESSE.

## La nouvelle année

Nouvelle annéé, nouvelle année
Dis-nous qu'as-tu sous ton bonnet?
J'ai quatre demoiselles
Toutes grandes et belles
La plus jeune en dentelle.
La seconde en épis
La cadette est en fruit
Et la dernière en neige
Voyez le beau cortège!
Nous chantons, nous dansons.
La ronde des saisons.

Sharmily Shanmugathasan
6 Rue des Louvres
Grages les Gonnesses







## Nous

Nous, les enfants de la terre
Nous avons un avenir
nous ne sommes pas
les enfants de la guerre
Nous voulons grandir
Nous vivons dans un monde
pleine de solidarité
Alors faissons une ronde
pour ceux qui nous ont quittes.

Subathini
6 Rue des Aubepines
Garges les Gonnesses.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



தெருவோரங்களில், மரங்களின் கீழ்
அகதி முகாம்களில் நித்தமும் அவதியுற்று
அல்லற் பட்டு வாழ்ந்துகொண்டிருக்கும்
எம் தேச மக்களுக்கு, எம் சகோதரர்கட்கு
ஒரு கை கொடுப்போம்.

எங்கள் பங்களிப்பை

# தமிழர் புனர்வாழ்வுக் கழகத்தின்

ஊடாக உறுதிப்படுத்துவோம்.

தமிழர் புனர்வாழ்வுக் கழகம் - பிரான்சுக் கிளை
188, Rue ORDENER, 75018 PARIS.
Tel: 42 63 24 87

தமிழர் புனர்வாழ்வுக் கழகம்
83/2, காங்கேசன்துறை வீதி
கொக்குவில்.

தமிழர் புனர்வாழ்வுக் கழகம்

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

# வான்மதியின் அறிவுப் போட்டி

இலக்கம் 01

(1) தமிழ் மொழி வளர்ச்சிக்கு பெரும் சேவையாற்றிய வெளிநாட்டவர்.

(2) காலத்தை வென்ற தமிழ்க் கவிஞன்.

(3) கம்பனின் பார்வையில் இராமாயணத்தில் புலித்தோல் போர்த்திய பசு.

(4) பாரிஸ் (பிரான்ஸ்) நகரில் முதல் தயாரிக்கப்பட்ட தமிழ் வீடியோ படம்.

(5) உலகம் உருண்டை என முதன் முதலில் கூறியவர்.

(6) 70 வருடங்களுக்கு ஒரு முறை தோற்றும் வால்வெள்ளியின் பெயர்.

(7) கிறிஸ்துவுக்கு முன் நான்காம் நூற்றாண்டில் தோன்றிய தத்துவஞானி.

(8) (இலங்கையில்) உணவுப் பார்சல்களில் பேய், பிசாசின் பார்வை படக் கூடாது என்பதற்காக கரித்துண்டு வைத்துக் கட்டுவது பாட்டிமாரின் வழக்கம். இந்நிகழ்வுக்கு கூறக் கூடிய விஞ்ஞான விளக்கம்.

(9) "Do as you would be done by" தமிழ் விளக்கம்.

(10) அரசியல், கலை, கலாச்சாரம், விளையாட்டு செய்திகள் சிறுவர் நிகழ்வுகள், சிறுகதைகள், அறிவுப் போட்டிகள் அனைத்தையும் தாங்கி இளைஞர்களின் எழுச்சிக் குரலாய் மொழி பேதமின்றி வெளிவரும் மாத இதழ்.

## நிபந்தனைகள்

(1) வான்மதி குடும்பத்தினர் பங்குபற்ற முடியாது.
(2) ஆசிரியரின் தீர்ப்பே இறுதியானது.
(3) 20 வயதுக்கு கீழ்ப்பட்டவர்கள் மட்டுமே பங்குபற்றலாம்.
(4) வதிவிட அனுமதி அட்டை அல்லது பாடசாலை அடையாள அட்டையின் போட்டோப் பிரதி இணைக்கப்பட வேண்டும்.

இப்பக்கத்தை அப்படியே கிழித்து விடைகளை எழுதி அனுப்பவும். பெறுமதி மிக்க பரிசில்கள் காத்திருக்கின்றன.

அனுப்பவேண்டிய முகவரி :- VANMATHY
c/o K. SIVARUBAN
13, Rue des Peupeliers,
95140 Garges les Gonesse, France.

விடைகள் வந்துசேர வேண்டிய கடைசித் திகதி:- 10. 05. 1992



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

# கும்மி

நா. அமிர்தலிங்கம்

கும்மியடிப்போம் கும்மியடிப்போம் குழந்தைகள் நாம் கும்மியடிப்போம்
கும்மியடிப்போம் கும்மியடிப்போம் குழந்தைகள் நாம் கும்மியடிப்போம்
நாளை எங்கள் தேசம் எங்கள் கையில் என்று கும்மியடிப்போம்
நாளை எங்கள் தேசம் எங்கள் கையில் என்று கும்மியடிப்போம்
கும்மியடிப்போம் கும்மியடிப்போம் குழந்தைகள் நாம் கும்மியடிப்போம்

அழகுமயில் அசைந்து வந்து அழகாக நடனமிடும்
கூடவந்து குயிலினங்கள் பாட்டிசைத்து கும்மியடிக்கும்
துள்ளிவரும் மானினங்கள் சேர்ந்து நின்று கும்மியடிக்கும்
அது எங்கள் நாடு என்று நாங்கள் இன்று கும்மியடிப்போம்

கும்மியடிப்போம் கும்மியடிப்போம் குழந்தைகள் நாம் கும்மியடிப்போம்
நாளை எங்கள் தேசம் எங்கள் கையில் என்று கும்மியடிப்போம்

காடுமலை தாண்டி வந்து கதிரவனும் ஒளிகொடுப்பான்
பருவ மழை தொடர்ந்து வந்து நில மகளின் உடல் நனைப்பாள்
அசைந்து வரும் அருவியது கடலுடன்தான் கும்மியடிக்க
மீனவரின் வலைதனிலே மீன்களும்தான் கும்மியடிக்கும்

கும்மியடிப்போம் கும்மியடிப்போம் குழந்தைகள் நாம் கும்மியடிப்போம்
நாளை எங்கள் தேசம் எங்கள் கையில் என்று கும்மியடிப்போம்

பனையும் தென்னையும் சூழ நிற்க காற்று வந்து கும்மியடிக்க
வயல் வரம்பில் தலைசாய்த்து நெற்கதிர்தான் கும்மியடிக்கும்
ஏர் எடுக்கும் உழவர் கையில் தானியங்கள் கும்மியடிக்க
பறந்துவரும் வண்டினங்கள் மலர்களுடன்தான் கும்மியடிக்கும்
அது எங்கள் நாடு என்று நாங்கள் இன்று கும்மியடிப்போம்

கும்மியடிப்போம் கும்மியடிப்போம் குழந்தைகள் நாம் கும்மியடிப்போம்
நாளை எங்கள் தேசம் எங்கள் கையில் என்று கும்மியடிப்போம்

அழுகின்ற குழந்தையது தாலாட்டில் கும்மியடிக்க
சினந்த பாம்புமது இசைகேட்டு கும்மியடிக்கும்
நடனமிடும் கால்களிலே சலங்கைகள் கும்மியடிக்க
கோவில் மணியோசைகள் சூழ்ந்து நின்று கும்மியடிப்போம்.

கும்மியடிப்போம் கும்மியடிப்போம் குழந்தைகள் நாம் கும்மியடிப்போம்
நாளை எங்கள் தேசம் எங்கள் கையில் என்று கும்மியடிப்போம்

www.tamilarangam.net



என் சின்னஞ்சிறு காதலியே
ஏனிந்த மௌனம்
உன் தோழர்கள்
உதைபந்தாட்டமாட
உன்னை அழைக்கவில்லையா
வழமைக்கு மாறல்லவா அது
ஏனெனில் நீ பெண்ணல்லவோ
கவலை கொள்ளாதே
எழுந்து
என்னுடன் வா
எட்டி உதை
இலக்குகளை நான் காட்டுகிறேன்.

தலைமைப் பதவிக்காய்
தலை இறுக்கித் திரிபவரை.
அதி மேதாவிகள் என நினைத்துக்கொண்டு
அதிகாரம் புரியும் அதா்மக்காரா்களை.
அப்பாவி மக்களை ஏமாற்றி சுகம் காண நினைக்கும்
அரசியல் ஓநாய்களை
சீதனம் என்று சொல்லி - பெண்கள் வாழ்க்கையை
சீர்குலைக்கும் சிறுமதி படைத்தவா்களை
சொல்லொன்று சொல்லி
செயலொன்று புரியும்நரிகளை
தாய்மொழியையும் - தமிழ்ப் பண்பையும்
தரங்கெடுக்க நினைப்பவரை
காலத்தை உணராத கவிஞா்களை கலைஞா்களை
எட்டி உதை
உன் கால்களின் இலக்குகள் இவை.
புயலெனப் பொங்கி எழு
புது உலகம் பிறக்கட்டும்.

- ரமேஷ் -

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்